# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்


வார இதழ் – இலவசம்

வெள்ளி, பெப்ரவரி 15, 2019. இதழ் - 51










**அவருக்கு என்னோட சரியான விருப்பம் மகன்...**

பக்கம் - 11



**ஆசிரியர் இடமாற்றக் குழப்பத்தால் மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு என்ன இழப்பீடு?**

பக்கம் - 03



**கிழக்கிலங்கையில் கைவினைக் கலைகள் (பகுதி 1)**

வங்கக் கடலினதும், பூமித்தாயினதும் பூரண ஆசியுடன் நெல் வளமும்,

பக்கம் -14



**அஞ்சன நிறுக்கும் கண்ணாலம் செய்யும் புத்த தேவர்!'**

பக்கம் - 07



# 'படுகொலை செய்யப்பட்ட தமிழ் செய்தியாளர்களுக்கு நஷ்ட ஈட்டை விட, நீதி வழங்குவதே முக்கியமானது'

## -- தமிழ் செய்தியாளர்கள் கண்டனம்

--- அமிர்தஸன் ---

போரின் போதும் அதன் பின்னரான காலத்திலும் கொல்லப்பட்ட, கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதை விட அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே பாதிக்கப்பட்டவர்களின் எதிர்ப்பார்ப்பு என தமிழ் ஊடகவியலாளர்கள் கூறியுள்ளனர்.

அரசாங்கம் வழங்கவுள்ள நஷ்டஈட்டினால் விசாரணைகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது எனவும் நஷ்டஈடு என்பது பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்ளின் குடும்பங்களுக்கு ஓர் இடைக்கால நிவாரணம் மாத்திரமே என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்ள வேண்டும் எனவும் தமிழ் ஊடகவியலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன் நஷ்டஈட்டுக்கான விண்ணப்பப் படிவங்களை எந்தவொரு பொலிஸ் நிலையத்திற்கும் சென்று பாதிக்கப்பட்ட செய்தியாளர்களின் உறவினர்கள் பெற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் வேண்டுமானால் விண்ணப்பப் படிவங்களை ஊடக அமைப்புகளின் மூலமாக விநியோகித்து பூர்த்தி செய்து அதனை மாவட்ட செயலகத்தில் ஒப்படைக்க முடியும் என்றும் அதற்கும்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# 'ஜனாதிபதி செயலணிக்குழுவின் அனுமதி கிடைத்ததும் கனகர்கிராம மக்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்படும்'

ජනාධිපති කාර්ය සාධක බලකාය
ஜனாதிபதி சயெலணி
PRESIDENTIAL TASK FORCE

(காரைதீவு நிருபர் சகா)

'பொத்துவில் கனகர் கிராம தமிழ்மக்களின் காணிகள் தொடர்பான சகல அறிக்கைகளும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருடாக ஜனாதிபதி செயலணிக்குழுவிற்கு (PRESIDENT TASK FORCE) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குழுவின் அனுமதி கிடைத்ததும் அந்த மக்களுக்கான காணிகள் பகிர்ந்தளிக்கப்படும்.'

இவ்வாறு பொத்துவில் பிரதேசச் செயலாளர் எம்.எ.சி.அப்துல் நசீர் தெரிவித்தார்.

கடந்த 180நாட்களாகப் போராட்டத்தி லீடுபட்டுவரும் பொத்துவில் 60ஆம் கட்டை கனகர்கிராம தமிழ்மக்களின் காணிபகிர்ந்தளிப்பு தொடர்பாக செய்தியாளர் சகா பிரதேச செயலாளரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

180நாட்களாக போராடிவரும் அந்தக் கொட்டிலில் இருந்து தொடர்புகொண்டு கேட்டபோது பிரதேசசெயலாளர் நசீர் தெரிவித்த சாதகமான பதில் அந்த மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மனித அபிவிருத்தித் தாபன கிழக்குமாகாண இணைப்பாளர் பொன்னையா ஸ்ரீகாந்த் முன்னிலையில் இத்தொடர்பாடல் இடம்பெற்றிருந்தது. அவ்வமயம் பிரதேசசெயலாளர் நசீர் மேலும் கூறுகையில்:

'குறித்த மக்களின் காணிகள் தொடர்பாக அவர்களிடமிருந்து பெற்ற ஆவணங்களைக்கொண்டு நேர்முகப்பரீட்சைகளை நடாத்தினோம். அதில் 202 குடும்பங்கள் மட்டில் தெரிவாகியுள்ளனர்.

குறிப்பாக ஏலவே வீடமைப்புத்திட்டத்தில் வசித்த 30குடும்பங்களுக்கு தேசியவீடமைப்பு அதிகாரசபையூடாக வீடமைப்புத்திட்டமொன்றை ஏற்படுத்திக்கொடுக்கும் திட்டமுள்ளது.

இன்னும் 62குடும்பங்கள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளதனால் அவர்களும் தெரிவாகியுள்ளனர். இதைவிட சத்தியக்கடதாசி மூலம் ஏற்றுக்கொள்ளதக்க குறைந்த பட்ச

தொடர்ச்சி... (பக்கம் -15 )




## 158 மில்லியன் நிதியில் 4000 மெற்றிக் தொன் நெல் கொள்வனவுக்கு ஏற்பாடு' - மட்டு. அரச அதிபர்.



விவசாயிகள் நெல் அறுவடையை தனியாருக்கு விற்பனை செய்து நஷ்டமடைவதனைத் தவிர்க்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 158 மில்லியன் ரூபா நிதியில் 4000 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

பெரும்போக அறுவடை நடைபெற்று வரும் நிலையில். நெல் கொள்வனவு குறித்து விவசாயிகள் முறைப்பாடுகளை வெளியிட்டு வருகின்றமை குறித்து கேட்டபோதே அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர்,

'வருடாந்தம் தாமதமாக நெல் கொள்வனவு நடைபெறுவதனால் அறுவடை செய்யப்படும் நெல்லை தனியார் வியாபாரிக்கு குறைந்த விலையில் விற்பனை செய்து வருவதனால் பெரும் நஷ்டத்தை எதிர் கொள்கின்றனர். விவசாயிகளால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அரசாங்க அதிபர் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இவ்வருடத்தில் அறுவடை ஆரம்பத்திலேயே விவசாயிகளிடமிருந்து நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் வருடாந்தம் தாமதமான நெல் கொள்வனவினால் ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்க்கும் வகையில் 158 மில்லியன் ரூபா நிதி திறைசேரியிடம் கோரப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு விவசாயியிடமிருந்தும் 2000 கிலோ என்ற விகிதத்தில் 4000 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

மாவட்டத்திலுள்ள கஜுவத்தை, முள்ளாமுனை, மணல்பிட்டி, கரடியனாறு, தும்பங்கேணி, புலிபாய்ந்தகல், போரதீவு ஆகிய இடங்களிலுள்ள நெற் களஞ்சியசாலைகளில் இக் கொள்வனவுகள் நெல் சந்தைப்படுத்தும் சபையினரால் நடைபெறும். நாடு 38 ரூபாவாகவும், சம்பா 41 ரூபாவாகவும் கொள்வனவுகள் நடைபெறுகின்றன. விவசாயிகள் நெல்லைத் தூய்மையாகவும், ஈரப்பதன் 14 வீதமாக இருக்கும் வகையிலும் 50 கிலோ பொதிகளில் குறிப்பிட்ட களஞ்சியசாலைகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யமுடியும்' என்றும் அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் தெரிவித்தார்.

## மண் அகழ்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புணாணை மேற்கு முள்ளிவட்டவான் பகுதி மக்களினால் சட்டவிரோத மண் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த புதன்கிழமை (13) பிரதேச மக்களால் இரண்டாவது தடவையாகவும் கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

கிரான் புலிபாய்ந்தகல் வீதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டமானது ஊர்வலமாக கிரான் பிரதேச செயலகத்தினை சென்றடைந்தது.

ஊர்வலத்தில் கலந்த கொண்டவர்கள் கோஷங்களை எழுப்பியும் கையில் பதாதைகளை ஏந்தியவாறும் கிரான் பிரதேச செயலகத்தினை சென்றடைந்தனர்.

முள்ளிவட்டவான் ஆற்றில் சட்டவிரோமான முறையில் மண் அகழ்வதால் விவசாய நிலங்கள் பாதிப்படைவதுடன், வீதிகள் குன்றும் குழியுமாக சேதமடைந்து காணப்படுவதாகவும் வீதி விபத்துக்கள் ஏற்படுவதாகவும் தூசு படிவதனால் குடிநீர் மாசுபடுவதாகவும் தெரிவித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## திருகோணமலையில் மண் அகழ்வு அனுமதி ரத்து

திருகோணமலை மாவட்டத்தில் மணல் அகழ்விற்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அனுமதிப்பத்திரங்களும் இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மறு அறிவித்தல் வரும் வரை அனைத்து அனுமதிப்பத்திரங்கள் இரத்து செய்யப்படுவதாக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

## மாக்கூப்ப பிள்ளையார் ஆலய புனரமைப்பு தொடர்பில் பொலநறுவைக்கு மட்டு அதிகாரிகள் கள விஜயம்

1990களில் ஏற்பட்ட யுத்த சூழல் காரணமாக பாதிக்கப்பட்ட வெலிக்கந்தை மாக்கூப்ப வெள்ளிமலைப் பிள்ளையார் ஆலயத்தினை புனரமைக்கும் நடவடிக்கைகள் குறித்த திட்ட அறிக்கைகளைத் சமர்ப்பிக்கும்படி பொலநறுவை மாவட்ட அரசாங்க அதிபர், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட உதவி மாவட்டச் செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையிலான குழுவினர் பொலநறுவை மாவட்ட அரசாங்க அதிபரை இவ் ஆலயத்தின் புனரமைப்புத் தொடர்பில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இவ்வாறு கேட்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, உதவி மாவட்டச் செயலாளர், மட்டக்களப்பு மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கே.குணநாயகம், ரமண மகரிசி அறப்பணி மன்றத்தின் இலங்கைக்கிளைத் தலைவர் எம்.செல்லத்துரை உள்ளிட்டோரும் இணைந்திருந்தனர்.

இதன்போது, பொலநறுவை மாவட்ட அரசாங்க அதிபர், மகாவலி அதிகார சபை பிராந்தியப் பணிப்பாளர், காணி செயற்திட்ட முகாமையாளர், வெலிகந்தை பிரதேச செயலாளர் உள்ளிட்டோரையும் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், நேரடியாக மாக்கூப்ப வெள்ளிமலைப் பிள்ளையார் ஆலயம், தம்கங்கடவை யாத்திரிகர் மடம் உள்ளிட்ட இடங்களுக்கும் சென்று பார்வையிட்டனர்.

மாக்கூப்ப வெள்ளிமலைப்பிள்ளையார் ஆலயம் தற்போது கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவின் ஊத்துச் சேனை கிராமத்தில் தர்க்காலிகமாக பிரதிஸ்டை செய்யப்பட்டு இயங்கி வருகின்றது.



பாரம்பரியமாகப் பராமரிக்கப்பட்ட மாக்குப்ப வெள்ளிமலைப்பிள்ளையார் ஆலயத்தினை சொந்த இடத்தில் மீளவும் இயங்குவதற்குரிய புனரமைப்பு நடவடிக்கையின் முக்கியத்துவம் குறித்தும் மீள இயங்கச் செய்வது குறித்தும் 1990களில் இப்பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வாழ்ந்துவரும் மக்கள், ஸ்ரீ ரமண மகரிசி இலங்கைக்கிளைத் தலைவர் எம்.செல்லத்துரை பாராளுமன்ற உறுப்பினர்களான ஜீ.சிறிநேசன், கே.துரைரெட்ணசிங்கம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் ஆகியோரிடம் வேண்டுகோள்களை முன்வைத்திருந்தார்கள்.

யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்களது இருப்பிடங்களை இழந்து, தொழில், பொருளாதாரங்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிவேற்றிக் கொள்ள முடியாதநிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இக் குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வியும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேச மக்களை விரைவில் மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இடம்பெயர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆதிசிவன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பம்!




(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவு தென்கோடியில் அமர்ந்து அருள்பாலித்துக்கொண்டிருக்கும் ஆதிசிவன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்த இவ் அலங்கார உற்சவம் தினப்பூஜை திருவிழாவுடன் எதிர்வரும் 20ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையுமென ஆலயத்தின் புதிய தலைவர் செ.புவனேந்திரன் தெரிவித்தார்.

அலங்கார உற்சவத்திற்காக ஆலயமும் ஆலய வளாகமும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. தினமும் இரவுப்பூஜை திருவிழாக்களுக்கு பெருந்தொகையான பக்தர்கள் சென்று வழிபடுகின்றனர். இதேவேளை 15வருடங்களுக்குப்பிறகு புதிதாக தெரிவான நிருவாகசபையில் தலைவராக செ.புவனேந்திரன் செயலாளராக த.செல்லத்துரை பொருளாளராக சீதுரைராசா உபதலைவராக தெதேவசுதன் உபசெயலாளராக கே.லோகநாதன் நிருவாகசபை உறுப்பினர்களாக கே.மதியழகன் மு.வடிவேல் த.கிருபராஜா சி.நீதன் ஜெ.தனுஸ்காந்த் கே.தயாபரன் ஆகியோர் தெரிவாகியிருந்தனர்.

## கஞ்சாவுடன் பாடசாலை மாணவன் கைது

மட்டக்களப்பில் 16 வயது பாடசாலை மாணவன் ஒருவரை கஞ்சாவுடன் செவ்வாய்க்கிழமை (12) பிற்பகல் பாடசாலை ஒன்றின் முன்பாக வைத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிமிருந்து ஒரு மில்லிக்கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவு பொலிசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவ தினமான இன்று பிற்பகல் 2 மணியளவில் புலனாய்வு பிரிவு பொலிசார் நகர்ப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வரும் குறித்த மாணவனை கைது செய்ததுடன் அவரிமிருந்து ஒரு மில்லிக்கிராம் கஞ்சாவை மீட்டுள்ளனர்.

மாமாங்க பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த மாணவன் இந்த வருடம் டிசம்பர் மாதம் கா.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளதாகவும். அவருடைய வீட்டிற்கு அருகில் கஞ்சா வியாபாரி ஒருவரிடம் இருந்து கஞ்சாவை பெற்று தனது பாடசாலையில் கல்வி கற்றுவரும் தனது பாடசாலை நண்பர்களுக்கு வியாபாரம் செய்து வந்துள்ளதாகவும். சுமார் பத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கஞ்சா பாவித்து வருவதாகவும். அவ்வாறே அன்றைய தினமும் கஞ்காவை பாடசாலைக்கு எடுத்து வந்துள்ளதாகவும். பொலிசாரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது

இதில் கைது செய்யப்பட்ட மாணவனை நீதிமன்றில் ஆர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# ஆசிரியர் இடமாற்றக் குழப்பத்தால் மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு என்ன இழப்பீடு?

## நிலைமை மோசம் என்று கூறி பொறுப்பில் இருந்து விலகுவதாக எச்சரிக்கும் வலயக் கல்விப் பணிப்பாளர்



ஆசிரியர்கள் இருந்தும் மாணவர்களுக்கு அவர்களது சேவையை சரியாக விநியோகிக்க முடியாது இருக்கும் நிலைமை காரணமாக தான் தனது பதவியையும் துறக்கத் தயாராக இருப்பதாக மட்டக்களப்பு மாவட்டத்துக்கு உட்பட்ட கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் எச்சரித்திருக்கிறார்.

கல்குடா கல்வி வலயத்தின் பணிப்பாளரான "தினகரன் ரவி" என்பவரே தனது முகநூலில் இவ்வாறு மனம் வருந்திக் கூறியுள்ளார்.

'நிலைமை இவ்வளவு மோசம்' என்று பகிரங்கமாக முகநூலில் பதிவிடும் அளவுக்கு இது போயிருக்கிறது.

இந்த இடமாற்றங்களுக்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்போது இந்தப் பிரச்சினைகள் எதனையும் கல்வித்துறை அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவில்லையா என்பது இங்கு முக்கிய கேள்வி.

அதுவும் சில இடங்களில் பெருமளவில் வெற்றிடங்கள் ஏற்படுமளவுக்கு எப்படி இவர்கள் சமநிலை தளம்பிய ஒரு இடமாற்ற திட்டத்தை அமுலாக்கினார்கள்?



அண்மைய ஆசிரியர் இடமாற்றங்களை யடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் சில இடங்கள், அளவுக்கு அதிகமான ஆசிரியர்களால் நிரம்ப, வேறு சில பின்தங்கிய இடங்களில் ஆசிரியர்களே இல்லாமல் மாணவர்கள் வெறுமனே வகுப்பறைகளில் சுவர்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இது குறித்து பலரும் பல விமர்சனங்களை முன்வைத்தும் இதுவரை சரியான முன்னேற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

ஆசிரியர் பற்றாக்குறை என்பது கடந்த காலப்பிரச்சினை. ஆனால், இன்று ஒரு சில வசதியான இடங்களில் அளவுக்கு அதிகமான ஆசிரியர்கள் இருக்க, வேறு சில இடங்களில் மாணவர்கள் "ஆசிரியர்" இல்லாமல் தவிக்கின்றனர். இது ஒரு சமனற்ற ஆசிரியர் விநியோக விவகாரம்.

அதுவும் ஒரு வலயக் கல்விப்பணிப்பாளரே,

அதற்கு பொறுப்பு யார்? இரண்டு மாதங்கள் ஆகியும் இந்த சமநிலை சீர் செய்யப்படவில்லை.

மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குள் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் 200 பேர் மேலதிகமாக இருக்க, கல்குடா போன்ற பின் தங்கிய வலயங்கள் பெரும் பிரச்சினையில் இருக்கின்றன.

இந்தப் பிரச்சினைகளுக்கு பலதரப்பினர் மீதும் கல்வி வட்டார ஆதாரங்கள் குறைகூறுகின்றன. ஒரு சில முக்கிய பாடங்களுக்கு வெற்றிடங்கள் அதிகமாக இருப்பதாக கேள்வி வரும்போது, சில குறிப்பிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த ஆட்கள் அதற்கு நியமிக்கப்பட்டதாகவும், ஆனால், அவர்கள் ஒரு குறித்த சில ஆண்டுகளின் பின்னர் இடமாற்றம் பெற்று தமது பகுதிகளுக்குச் சென்றுவிட, இந்தப்பகுதிகளில் குறித்த பாடங்களுக்கு மீண்டும் கற்பிக்க ஆளில்லா நிலை உருவாகின்றதாம்.

இதனைவிட வேறு சிலர் கஷ்டப் பிரதேசங்களாக கூறப்படும் இடங்களில், 'அது தமது பிரதேசம்' என்று கூறி, நியமனம் பெற்றுவிட்டு, சில வருடங்களின் பின்னர் நகரங்களை நோக்கி நகர்ந்துவிடுவதால், இந்தக் கஷ்டப் பிரதேசப் பிள்ளைகள் மீண்டும் நிர்க்கதியாக விடப்படுகின்றனர்.

இப்படியாக பலவிதமான காரணங்களை பாதிக்கப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன. அரசியல் தலையீடுகள், தவறான மருத்துவ அறிக்கைகள் போன்ற பலவிதமான குறைபாடுகள் குறித்தும் அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

இவ்வளவு பிரச்சினைகள் இருந்தும் இவற்றை கண்டும் காணாது இருந்த உயர் அதிகாரிகளும் நிச்சயமாக இதற்கு பொறுப்புக் கூறவேண்டும்.

**சீவகன் பூபாலரட்ணம்**

ஒரு கல்வி வலயத்தில் ஆசிரியர்களே இல்லாமல் மாணவர்கள் பரிதவிக்க, வேறு ஒரு கல்வி வலயத்தில் ஆசிரியர்கள் அளவுக்கு அதிகமாக இருக்கும் நிலையில் தன்னால் ஒரு பணிப்பாளராக வேலை செய்வது முடியாதது என்கிறார் தினகரன் ரவி. வரும் மார்ச் மாதத்துக்கு முன்னதாக இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால், தான் பொறுப்பில் இருந்து விலகப் போவதாக அவர் கூறுகிறார். சரி, இது கல்வித் திணைக்களத்துக் குள்ளேயே குழப்பத்தை ஏற்படுத்திய ஒரு விவகாரமாக இப்போது மாறியிருக்கிறது. இதனை நாங்கள் யாரும் வெளியில் இருந்து கூறவில்லை. பொறுக்க முடியாமல் உயர் கல்வி அதிகாரிகளே முகநூலில் பேசத்தொடங்கியுள்ளனர்.

இவ்வளவு நடந்தும் கல்வித்திணைக்களம் எந்தவிதமான பதிலும் கூறாமல் அமைதி காப்பது எப்படி நியாயமாகும். ஆசிரியர்கள் எல்லோரும் இடமாற்றம் கோரினார்கள், பொறுப்பற்று இருந்தார்கள், அரசியல் செல்வாக்கு பிரயோகிக்கப்பட்டது, என்று இன்னும் பல காரணங்கள் கூறலாம். ஆனால், இந்தத் தவறுகளுக்காக மாணவர்கள் இவ்வளவு காலம் ஆசிரியர் இல்லாமல் இருப்பது ஒரு பாரபட்சம். அவர்களது மனித உரிமை மீறப்படும் செயல்.

ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு இன்னுமொரு இடத்தில் அவர்கள் ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு சும்மா இருக்க, மாணவர்கள் மறுபுறம் பாடம் எதுவும் இல்லாமல் வகுப்பறையில் கிடந்து ஏங்குவது என்பது அரச நிதி துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்டது. மாணவரின் கல்வி கற்பதற்கான உரிமையை தமது பலவீனங்கள் காரணமாக மறுக்கும் செயல். இந்த விடயத்துக்காக மாகாண கல்வித்திணைக்களம் மற்றும் அமைச்சு மக்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும். இடமாற்றங்கள் நடந்து கிட்டத்தட்ட 2 மாதங்கள் ஆகிவிட்டன. இதுவரை தீர்க்கப்படாத இந்தப் பிரச்சினையால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கு ஈடு கட்டுவதற்கான வழியையும் கல்வித்திணைக்களம் அறிவித்தாக வேண்டும்.

போட்டிப் பரீட்சைகளே எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற இன்றுள்ள கல்விச் சூழலில் இந்த மாணவர்களுக்காக இழப்பை எவ்வாறு ஈடு கட்டுவது என்பது குறித்து கல்வித்திணைக்களம் வெளிப்படைத்தன்மையுடன் பேச முற்பட வேண்டும். உண்மையில் இந்த விடயத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சிந்திப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. உண்மையில் கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட இப்படியான மாணவர்கள் சார்பில் அக்கறை உள்ளவர்கள் இவை குறித்துக்கூட கவனம் செலுத்த வேண்டும். எதிலும் வெளிப்படைத்தன்மை அவசியம்.

## உயர்பதவித் தெரிவுகளில் சிறுபான்மையினத்தின் அவலநிலை!

(காரைதீவு நிருபர் சகா)

இலங்கையின் உயர்பதவிகளுக்கான தெரிவுப்பரீட்சைகளில் தெரிவாகும் தமிழ்மொழிமூல பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை வரவரக் குறைவடைந்துசெல்வதையிட்டு விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வெளியான இலங்கை கணக்காளர் சேவைக்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைகளில் 187பேர் சித்தியடைந்து தெரிவாகியுள்ளனர். இவர்களுள் 183பேர் பெரும்பான்மையினராகவிருக்க ஆக 4பேரே சிறுபான்மையினராகவுள்ளனர். அவர்களுள் மூவர் தமிழர்கள் ஒருவர் முஸ்லிம்.

இனவிகிதாசாரப்படி மொழிரீதியான பரீட்சையினடிப்படையில் தெரிவாகியிருப்பின் சிங்களவர் 157பேரும் தமிழர் 18பேரும் முஸ்லிம்கள் 12பேரும் அண்ணளவாகத் தெரிவாகியிருக்கவேண்டும். நேற்றுமுன்தினம் வெளியாகிய இலங்கை திட்டமிடல் சேவைக்கான பரீட்சைப்பெறுபேற்றினடிப்படையில் 31பேர் நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவாகியுள்ளனர். அவர்களில் 30பேர் பெரும்பான்மையினம்.ஒருவர் மாத்திரமே சிறுபான்மையினம். இப்பரீட்சைகள் தமிழ் சிங்கள மொழிவாரியாக நடாத்தப்படுகின்றபோதிலும் பெறுபேறு பொதுவாகவே பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் உயர்பதவிகளுக்கு இவ்வாறு இனவிகிதாசாரத்திலில்லாது மிகவும் குறைந்த தொகையினர் தெரிவாகிவருவது எதிர்காலத்தில் பல பாதக விளைவுகளை உருவாக்கலாம். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் காலத்தில் தொடரப்பட்ட வழக்கொன்றின் அடிப்படையில் பரீட்சைப்புள்ளித்திறமை அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படவேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டதன் பலனாக அந்நடைமுறை தொடர்கிறது.

இது விடயத்தில் தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் தலையிட்டு உரிய நியாயமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என சிறுபான்மையின சமுகம் கேட்டுக்கொள்கிறது.

படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

# மாவடிமுன்மாரி பிரதேசத்தில் உப அஞ்சல் அலுவலகம் அமைக்கப்பட வேண்டும்

'நம்மட பகுதியிலையும் தபால் நிலையமிருந்தால் கொக்கட்டிச் சோலைக்கு நடக்க வேண்டிய தேவையில்லையே. 5 ரூபா முத்திரை வாங்கிறத்திற்கும் 20 கிலோ மீற்றர் போகவேணும், எப்பதான் இந்தப்பகுதியில ஒரு தபாற்கந்தோர் அமையப்போகுதோ, தெரியாது?' என புறுபுறுத்துக்கொண்டே சென்றாள் பார்வதி.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவில்(பட்டிப்பளைப் பிரதேசம்) இருபத்திநான்கு (24) கிராமசேவையாளர் பிரிவுகள் உள்ளன. கஷ்ட, அதிகஷ்ட கிராமங்களை கொண்ட இப்பிரதேசத்தில் இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு போக்குவரத்து, மின்சாரம், வீதி, அரச திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் மேலும் பல வசதிகள் தேவைப்படுகின்றன. நவீனத்துவ வசதியுடன் கூடிய திணைக்களங்களும், சேவை நிலையங்களும் நகர்ப்புறங்களில் அமைகின்ற நிலையில் இப்பிரதேசத்தில் சேவை புரியும் சில சேவை நிலையங்களை விஸ்தரிக்க வேண்டிய தேவைகளும் உள்ளன.

மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் சிறு நகரமாக கொக்கட்டிச்சோலை கிராமம் அமைந்திருக்கின்றது. இங்கு சேவை நிலையங்கள் பலவும், வர்த்தக நிலையங்களும், சந்தையும்




அமைந்துள்ளன. மேலும் பிரதேசத்தின் மகிமையையும், சிறப்பையையும் இங்குள்ள ஆலயங்களான கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயம், பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம் போன்றன அமைந்து வெளிப்படுத்தி நிற்கின்றன.


கொக்கட்டிச்சோலையை தபால் முகவரியாக கொண்ட இப்பிரதேசத்தில் கொக்கட்டிச்சோலை தபால் நிலையத்தின் கீழ் மூன்று உப அஞ்சல் அலுவலகங்கள் காணப்படுகின்றன. அவை முதலைக்குடா, அம்பிளாந்துறை, அரசடித்தீவு போன்ற கிராமங்களில் அமைந்து மக்களுக்கான சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது. கொக்கட்டிச்சோலை தபால் நிலையத்தின் ஊடாக நாளொன்றிக்கு 500க்கு மேற்பட்ட கடிதங்களும், மாதமொன்றிற்கு 15,000க்கு மேற்பட்ட கடிதங்களும் பரிமாறப்பட்டுக்கொண்டிருப்பதாக அறியமுடிகின்றது. அதுபோன்று பொதுசன மாதாந்த கொடுப்பனவு, மின்சாரகட்டணம், பரீட்சைக்கட்டணம், தபால் அடையாள அட்டை, வீதிப் போக்குவரத்து அபராதம் போன்ற பல்வேறு சேவைகளும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இச் சேவைகளைப் பெறுவதற்காக பிரதேசத்தில் உள்ள கிராம மக்கள் வருகை தந்து சேவைகளை பெற்றுக்கொள்கின்றனர். அந்நிலையில் கொக்கட்டிச்சோலை தபால் நிலையத்தில் இருந்து 10 தொடக்கம் 20 கிலோ மீற்றருக்கும் தொலைவில் உள்ள தாந்தாமலை, மாவடிமுன்மாரி, பனிச்சையடிமுன்மாரி, குழுவினமடு போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இத் தபால் நிலையத்திற்கே வருகை தந்து சேவை பெறுகின்றனர். இக்கிராமங்களில் மூவாயிரம் பேரளவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இங்கு நாள் ஒன்றிக்கு 80க்கு மேற்பட்ட கடிதங்களும் மாதமொன்றிற்கு 2000க்கு மேற்பட்டவையும் பரிமாறப்படுவதாக அறியமுடிகின்றது. அதுபோன்று இக்கிராமங்களில் இருந்து 120க்கு மேற்பட்டவர்கள் பொதுசன மாதாந்த கொடுப்பனவை பெறுவதற்கும் செல்கின்றனர். இங்கு பிரசித்திபெற்ற

**படுவான் பாலகன்**

தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயம் அமையப்பெற்றுள்ளது. இவ்வாலயத்திற்கு நாள்தோறும் அடியார்கள் பல பாகங்களிலும் இருந்து சென்று வழிபட்டு செல்கின்றனர். அதே நேரம் தாந்தாமலையில் உப பொலிஸ் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. விடுதிக்கல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மாவடிமுன்மாரி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, நாற்பதுவட்டை விபுலானந்த வித்தியாலயம், குளுவினமடு விநாயகர் வித்தியாலயம், கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம், போன்ற பாடசாலைகளும் குறித்த கிராமங்களில் அமைந்துள்ளன. மேலும் மாவடிமுன்மாரி கிராமத்தில் கமநலகேந்திர நிலையமும், கொல்லநுலை, குளுவினமடு, மாவடிமுன்மாரி, நாற்பதுவட்டை போன்ற இடங்களில் பாலர் பாடசாலைகளும், பல ஆலயங்களும், பால்சேகரிப்பு நிலையங்களும் அமையப்பெற்றுள்ளன. இவ்வாறான நிறுவனங்கள் அனைத்தும் தபால் சேவை பெறுவதற்கு கொக்கட்டிச்சோலைக்கே செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இதனால் உரிய நேரத்தில் உரிய தகவல்களை அனுப்பமுடியாத நிலையும், நீண்ட நேரவிரயங்களும், அதிக போக்குவரத்து செலவினையும் செய்யவேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஒரு கடிதத்தை 20கிலோமீற்றர் சென்று தபால் நிலையத்தில் வழங்க வேண்டிய நிலையினால் அக்கடிதத்தினை அனுப்புவதற்காக செலவிடப்படும் செலவினைவிட பலமடங்கு போக்குவரத்துக்காக செலவு செய்யவேண்டியுள்ளது. அதுபோல பொதுசன மாதாந்த கொடுப்பனவினை பெறும் முதியோரும் நீண்ட தூரம் பயணம் செய்து பணத்தினை பெறவேண்டிய நிலை உள்ளது. இதனால் தங்களுக்கு வழங்கும் பணத்தில் ஒரு தொகையை போக்குவரத்துக்கு செலவழிக்க வேண்டியிருப்பதுடன், போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதுபோல மாணவர்கள், உத்தியோகத்தர்கள் எனப்பலரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இவ்வாறான பல்வேறு சிரமங்களை நீக்க, குறித்த கிராமங்களுக்கு மத்தியில் உப அஞ்சல் அலுவலகம் ஒன்று அமையவேண்டியது அவசியமாகின்றது. என்றாள் பார்வதி.

# மாதவிடாய் : ஆண்கள் அறிந்துகொள்ளவேண்டியவை





மாதவிடாய் பற்றி ஆண்களும் அறிந்துகொள்ளவேண்டும் என்று அண்மைக்காலமாக சமூக வளைத்தளங்களில் ஒரு ஹாஷ் டக் ஓடிக்கொண்டிருக்கிறது? இந்த மாதவிடாய் என்றால் என்ன? அதை ஏன் ஒரு ஆண் அறிந்துகொள்ளவேண்டும்?

**மருத்துவர் சிவச்சந்திரன் சிவஞானம்**

ஒரு பெண் கர்ப்பம் தரிக்க தகுதியான பின், அவளுடைய உடம்பில் ஒவ்வொரு மாதமும் ஒரு முட்டை விருத்தியடையும். அந்த முட்டை கருத்தரித்தால், உள்வாங்கிக்கொள்ள கர்ப்பைப்பையின் உட்பகுதியும் மாதாமாதம் வளர்ச்சியடைந்து தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ளும். அந்த முட்டை கருத்தரிக்காமல் அழிந்துபோகும்போது வளர்ச்சியடைந்த கர்ப்பைப்பையின் உட்பகுதியும், சிதைவடைந்து இரத்தமாக வெளியேறும்.
ஆக, மாதவிடாய் என்பது, ஒரு உயிரை உள்வாங்க தயாரான கர்ப்பைப்பையின் உட்பகுதியின் வெளியேற்றமேயன்றி, அது ஒரு தீண்டத்தகாத விடயமோ, அல்லது பெண்ணை ஓரம்கட்டி வைக்கவேண்டியதற்கான காரணமோ இல்லை.

இதன்போது இரத்தம் வெளியேறுவது மட்டுமா நடக்கும்?

இல்லை.

உங்கள் வாயினுள் ஒரு சிறிய கட்டி வளர்கிறது, பிறகு அது சிதைவடைந்து இரத்தமாக வெளியேறும்போது உங்களுக்கு எப்படி இருக்கும் என ஆண்கள் கற்பனை செய்துபாருங்கள். ஒரு சிறிய கட்டிக்கே அப்படியென்றால், கர்ப்பைப்பையின் உட்பகுதி முழுவதுமாக சிதைவடையும் போது எவ்வளவு அசௌகரியங்கள் ஒரு பெண்ணுக்கு ஏற்படும். அதுவும் ஒவ்வொரு மாதமும் இந்த அசௌகரியத்தை ஒரு பெண் எதிர்கொள்ள வேண்டும் என்பது எவ்வளவு கடினமானதாக இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

ஒரு பெண்ணின் உள்ளே எழுந்தமானமாக முட்டை வளர்வதில்லை. இதன்போது எக்கச்சக்கமான ஹோர்மோன்கள் சுரக்கப்படும். இந்த ஹோர்மோன்கள்தான் கர்ப்பைப்பையின் உட்பகுதியின் வளர்ச்சிக்கு உதவுவது மட்டுமல்லாமல், ஒரு குழந்தை உருவானால், அவளில் உடம்பில் ஏற்படவேண்டிய பல மாற்றங்களை உருவாக்கும்.

உதாரணத்துக்கு, ஒரு பெண் பால் கொடுப்பதற்கு ஒப்பான ஒருசில மாற்றங்கள் மார்பில் ஏற்படும். இதனாலும் எக்கச்சக்கமான அசௌகரியங்கள் ஏற்படும்.

அந்தக்ஹோர்மன்களின் தாக்கத்தால் பெண்கள் மன அளவிலும் பல அழுத்தத்திற்கு உள்ளாவார்கள். அதனால் அவர்களின் கோபம், எரிச்சலடையும் தன்மை அதிகரிக்கும். இவ்வாறு ஒரு பெண் மாதாமாதம் பல உடல், உள அழுத்தத்துக்கு உள்ளாவது, என்றோ ஒருநாள் அவள் ஒரு

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# பெரியாரைப் புரிந்து கொள்ளல்

கலாநிதி.சு.சிவரெத்தினம்

70 ஆண்டுகளுக்கு மேலாக தமிழக மக்களின் சமூக விடுதலைக்காக ஓய்வின்றிப் போராடி இந்திய மக்களுக்கான ஒரு சிந்தனை மரபை தோற்றுவித்தவர்களுள் பெரியார் முக்கியமானவராகும். அவருடைய சிந்தனை மரபை விளங்கிக் கொள்ளும் போதுதான் பெரியாரை விளங்கிக் கொள்ள முடியும்.

பெரியாருக்கு முன்பு இரண்டு வித சிந்தனைப் போக்குகள் இருந்தன.


1. இந்தியாவில் இருந்த நாகரீகமற்ற மக்களை ஓரளவு நாகரீகப்படுத்தியவர்கள் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவில் குடியேறிய ஆரியர்கள் என்பது, அவர்களே உயர்ந்தவர்கள்.

2. ஆரிய மொழியான சமஸ்கிருதம் உயர்ந்த மொழி, அதில் கூறப்படுகின்ற அனைத்தும் உயர்ந்த எண்ணக்கருக்கள், சமூகம் அதையொட்டி ஒழுகுதல் வேண்டும் என்பது.

இந்த இரு போக்குகளில் இருந்தும் விலகி இதனை விமர்சித்து, கிண்டலடித்து இந்தியப் பண்பாட்டினூடாக மேற்கிளம்பிய சிந்தனையாளர்களே அம்பேத்கார், பெரியார், அயோத்திதாச பண்டிதர், கோசாம்பி, ராகுல்சாங்கிருத்தியாயன் போன்றவர்களாவர்.

பெரியார் தனது சிந்தனையை 'பகுத்தறிவு' என்பார். இவருடைய பகுத்தறிவு என்பது உய்த்தறிவாக அன்றி அனுபவவாத அறிவாக இருப்பதைக் காணலாம். இந்த அனுபவ அறிவு அவரை திராவிடம் தொடர்பான நிலைப்பாட்டுக்கு கொண்டு செல்கின்றது. குறிப்பாக சிந்துவெளிநாகரீக கண்டுபிடிப்புக்கள், கால்ட்டு வெல்லின் மொழி ஆராச்சி திராவிட மொழிக் குடும்பத்தை தனித்துவமான மொழிக்குடுப்பமாக எடுத்துக்காட்டுதல் போன்றன ஆரியத்துக்கு மாற்றாக திராவிடத்தை முன்வைப்பதற்கான விஞ்ஞான அடிப்படைகளை அவருக்கு வழங்கியிருந்தன.





பெரியாரின் பகுத்தறிவு ஒரு ஏட்டறிவாக அன்றி சமூகமாற்றத்துக்கான ஓர் ஆயுதமாக பகுத்தறிவை அவர் முன்னிறுத்துகின்றார். பல நூற்றாண்டுகளாக மனித மனதில் பதியப்பட்ட சமூகம் தொடர்பான பல மூட நம்பிக்கைகளை உடைத்து சரியான அறிவை உண்டு பண்ணுவதற்காக கடுமையாக உழைத்தார். 'உலகிலுள்ள மற்ற சமூதாயங்களைப் போலத் தமிழ்ச் சமுதாயத்தையும் மானமும் அறிவும் உள்ள சமூகமாக மாற்றுகின்ற பணியைத் தலைமேற் போட்டுக் கொண்டவன் நான்' என்பார். இந்தச் சமூக மாற்றத்தை, சமூகச் சீர்திருத்தத்தின் மூலம் செய்யலாம் என அவர் கருதவில்லை. ஒரு புரட்சியாகப் பார்க்கின்றார்.

1933ம் ஆண்டு கோவையில் பேசும்போது, 'நமது இயக்கம் சீர்திருத்த இயக்கமல்ல. அழிவு வேலை இயக்கம். இன்றைய நிலையில் சமத்துவத்தன்மைக்கு மதசம்பந்தமாக, கடவுள் சம்பந்தமாக, பொருளாதார அரசியல் சம்பந்தமாக அனுகூலமானவை இல்லை. ஆகவே எப்படிச் சீர்திருத்தம் செய்வீர்கள்? இவைகளில் செய்யும் சீர்திருத்தம் இவை இன்னும் நெடுங்காலத்திற்கு நிலைத்து இருக்கத்தான் பயன்படுமே தவிர மாறுதலை உண்டாக்க முடியாது. வேகமாய் போவதற்கு இடையூறாய் கடவுளும் மதமும் அரசாங்கமும் குறுக்கே போடப்படுகின்றன. இவற்றை ஒழிக்க வேண்டும். நாம் பொதுநலச் சேவைக்காரர்கள் அல்ல. புரட்சிக்காரர்கள் நமக்கு சீர்திருத்தங்களும் பொதுநலச் சேவைக்காரர்களும் பெரிய விரோதிகள், தலைகீழாய்க் கவிழ்ப்பதுதான் புரட்சி. இது குற்றமானால் இதை ஒவ்வொருவரும் குஷாலாகச் செய்ய வேண்டியதுதான்' என்பார்.

இந்தப் புரட்சிகரச் சிந்தனை காரணமாக அவரால் மகாத்மா காந்தியுடன் சேர்ந்து அரசியல் விடுதலைப் பயணத்தில் பயணிக்க முடியாமல், காங்கிரசில் இருந்து விலகி நீதிக் கட்சியில் இணைந்து கொள்கிறார். 1940 ல் தனித் திராவிட நாட்டுக் கொள்கையை முன்வைக்கிறார். 1949இல் திராவிட கழகத்தை உருவாக்கி சுயமரியாதைக்கு முக்கியத்தவம் வழங்கிச் செயற்படலானார்.

கடவுள், மதம், சாதி, தேசம், மொழி, முதலான எந்த ஆணைகளுக்குள்ளும் தன்னை இழக்காத சுய உறுதிப்பாடே சுயமரியாதை என வரையறுத்து, அதனையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். சுயமரியாதையினைத் தடுக்கின்ற கருவியாக மதத்தினைப் பார்க்கின்றார். இதனால் அவருடைய பெருமளவான விமர்சன மையம் மதமாகவே இருந்தது. 'மார்க்ஸ் மதத்தை "அபின்" என்றார் நான் அதனை "விஷம்" என்பேன்' என மதத்தினை வெறுத்து ஒதுக்கினார். இந்த வெறுப்பு சமஸ்கிருதமயமாக்கப்பட்ட தெய்வங்களும் மதமுமாக இருந்ததே தவிர கிராம மக்களின் தெய்வங்களையும் வழிபாடுகளையும் அவர் தாக்கவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். பிள்ளையார் சிலைகளையும் இராமன் சிலைகளையும்தான் உடைத்தாரே தவிர கிராமத் தெய்வங்களான சுடலை மாடனையோ அல்லது வைரவரையோ அவர் உடைக்கவில்லை என்பது இதற்கு உதாரணமாகும்.

அகில இந்திய தேசியம் குறித்த மலைப்பு அவரிடம் இல்லை. அது வைதீக மேட்டுக்குடிகளின் அதிகாரம் நோக்கிய நகர்வு என்பதில் பெரியார் தெளிவுடன் இருந்தார். இந்த ஆரியத் தேசியம் பல வட்டார அடையாளங்களை அழித்து விடும் கருத்தியல் என்பார். தான் வரித்துக் கொண்ட சுயமரியாதையைப் பேண ஆரிய மாயையான தேசியத்தை அணுகாதிருத்தல் அதாவது பார்ப்பனியத்தை தள்ளி வைத்தல் என்ற அச்சில் இயங்கினார். இதன் காரணத்தினாலத்தான் அவரிடம் இந்திய தேசியத்துக்கு மாற்றான திராவிட தேசியத்தை முன்மொழிவதற்கு காரணம் எனலாம்.

இந்தச் சிந்தனைப் புலத்தில்த்தான் இன்றைய எமது இலங்கைச் சமூகநிலமையினைப் பார்க்க வேண்டும். 1960 களில் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் நிகழ்ந்த சாதி எதிர்ப்புப் போராட்டங்களும் ஆலயப் பிரவேசப் போராட்டங்களும் பெரியாருடைய சிந்தனையினாலும் அவருடைய வாரிசுகளான அண்ணாத்துரை, கலைஞர் கருணாநிதி போன்றவர்களின் பகுத்தறிவுவாதப் பேச்சுக்களின் செல்வாக்கினால் ஏற்பட்டதாகும். ஆனால் 1970களில் இருந்து ஆரம்பித்த பேரினவாத அரசின் இனவாத அடக்குமுறை காரணமாக தமிழர்கள் தங்களுக்குள் இருந்த உள் முரண்பாடுகளை மறந்து தமிழர்கள் என்ற ஒற்றை அடையாளத்துக்குள் ஒன்று சோந்தனர். இந்த ஒன்று சேர்தல் எம்மை வெளித்தோற்றத்துக்கு பலமுள்ளவர்களாகக் காட்டினாலும் உள்ளுக்குள் பல அகமுரண்பாடுகளைக் கொண்டவர்களாகவே இருந்தோம். இந்த அகமுரண்பாட்டுடனே எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தோம். எமக்குள் காணப்பட்ட சாதி, மத, பிரதேச முரண்பாடுகளே எமது போராட்டத்தின் தோல்விக்குக் காரணங்களில் ஒன்றாகும்.

தேசிய விடுதலையுடன் சமூக விடுதலையையும் நாம் கையிலெடுத்தக் கொண்டு பயணித்திருக்க வேண்டும் என இன்று பல புத்திஜீவிகள் உணர்கின்றனர். சமூகவிடுதலையை கவனத்தில் கொள்ளாத காரணத்தினால் நாம் எந்தவொரு விடுதலையுமின்றி இலட்சக்கணக்கான உயிர்களையும் உடமைகளையும் இழந்து மீண்டும் 1960ம் ஆண்டுகளுக்கு திரும்பி வந்து நிற்கின்றோம்.

இன்று நாம் இரு விதமான தாக்கங்களுக்கு உள்ளாகின்றோம்.

1. மத அடிப்படைவாதம்
2. உலகமயமாக்கம்

மத அடிப்படைவாதம்:

எல்லா மதங்களும் தம்மை மேலும் மேலும் புனிதப்படுத்தி கூர்மைப்படுத்திக்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# அரங்கத்தை வாழ்த்திய மூத்த விமர்சகர் ஒருவர்

(இலங்கையின் மூத்த ஒலிபரப்பாளர்களில் ஒருவரும் பிபிசியின் முன்னாள் செய்தி வாசிப்பாளருமான சுந்தா என்னும் சுந்தரலிங்கம் அவர்களின் துணைவியாரான பராசக்தி சுந்தரலிங்கம் அவர்கள் அரங்கத்தின் 50 வது இதழ் குறித்து அனுப்புவைத்த வாழ்த்துச் செய்தி.)

அரங்கம் கண்டு மகிழ்ந்தோம் -

மறைந்தும் புதைந்தும் இருந்த கிழக்கிலங்கைப் பொக்கிஷங்களை அரங்கேற்றும் உங்கள் தொண்டைப் போற்ற வார்த்தையில்லை !

திரு மெளனகுரு சொல்லியிருப்பதுபோல வசதியான வாழ்வைத் துறந்து பிறந்தமண்ணின் பெருமைகாக்க வந்திருக்கும் உங்களையும் உங்கள் குழுமத்தையும் பாராட்டுகிறோம்

ஒவ்வொரு இதழையும் ஆவலோடு எதிர்பார்த்து வாசித்து ரசிக்கிறோம்.

எல்லாமே புதியன -உங்கள் மண்பற்று பாரதியின்
எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி

இருந்ததும் இந்நாடே – அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே – அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே – இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்திஎன்
வாயுற வாழ்த்தேனோ? ---------

என்னும் பாடல் வரிகளை நினைக்க வைக்கின்றன

அந்தக் கவிஞன் எதைத்தான் விட்டுவைத்தான் !!!

நன்றியுடன் அக்காவின் அன்பும் ஆசியும் ----

(இவர்களைப் போன்ற பெரியவர்களின் வாழ்த்துகளே அரங்கத்தையும் அதன் வாசகர்களையும் வாழவைக்கும். நன்றி தாயே. - ஆசிரியர்)



# பட்டறிவு

## பண்டையசிங்களக்கோத்திரபஞ்சாயத்து இயங்கியதுஎப்படி?

1818 ஆம் ஆண்டு ஊவா வெல்லஸ்ஸ விடுதலைப் போராட்டத்தில், ஆங்கிலேயர்களுக்கு எதிராக பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்ட சிங்களப் படைகளை ஆங்கிலேயப்படைகள் மிகவும் கொடூரமாக ஒடுக்கின. இந்தக் கிளர்ச்சியை அடக்குவதாகக் கூறிக்கொண்டு நாட்டின் வளங்களை எப்படி எல்லாம் அழித்தொழித்தார்கள் என்பது தனிக்கதை அவற்றைப் பற்றி தமிழில் போதிய அளவு பதிவு செய்யப்படவில்லை.

1833இல் இலங்கைக்கான நிர்வாக சீர்த்திருத்தத்தை ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்தும்போது ஏற்கெனவே இலங்கையில் கிராம சபைகள் நடைமுறையில் இருந்தன. கிராம சபைகளுக்கென்று இலங்கையில் நீண்ட வரலாறு உண்டு. அதை இல்லாதொழித்துவிட்டே ஆங்கிலேயர்கள் தமது ஆட்சி அலகை அமுலுக்கு கொண்டுவந்தார்கள். ஆனால் இலங்கை மக்களை வெறுமனே தமது ஆங்கிலேய பாணியிலான அதிகார அமைப்புக்குள் அடக்கிவிடுவது அவர்களுக்கு இலகுவானதாக இருக்கவில்லை. எனவே அவர்கள் மீண்டும் 1848இல் பழைய கிராம சபையையே மீண்டும் அமுல்படுத்த நேரிட்டது. அந்த முறையை மீண்டும் சீர்திருத்தி 1856இல் அன்றைய ஆங்கிலேய தேசாதிபதி ஹென்றி வோர்ட் கிராம சபைக்கு மீண்டும் புத்துயிரளித்தார். அதன் பின்னர் உள்ளூராட்சி சபைகள் இலங்கையில் ஆங்கிலேயர்களால் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டபோதும் ஆங்கிலேயர்கள் இலங்கையைக் கைவிட்டுவிட்டுச் சென்றதன் பின்னரும் கூட சுதேச ஆட்சியாளர்களால் கிராம சபை முறை அப்படியே பேணப்பட்டது. இலங்கையின் ஆட்சி அதிகார முறையின் ஒரு அங்கமாக 1980 மாவட்ட அபிவிருத்தி சபை வரும் வரை இந்த கிராம சபை நீடித்தது. மாவட்ட அபிவிருத்தி சபை கூட இலங்கையின் இனக்குழுமங்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழியாகவே அறிமுகப்படுத்தினார்கள். குறிப்பாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதையே முன்மொழிந்தார்கள்.

1980களில் களனி பல்கலைக்கழகத்தின் சிங்களப் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் சந்திரசிறி பள்ளியகுரு தொலைகாட்சி நிகழ்ச்சியொன்றுக்காக நுவரகலாவி என்கிற கிராமத்தில் இருந்த கோத்திர சபை சட்டங்கள் பற்றிய விபரங்களை வெளிப்படுத்தினார்.

“இந்த நிகழ்ச்சியை பார்த்த பேராதனை பல்கலைக்கழக மாணவர் குழுவொன்று அந்த கிராமத்தில் நிலவிய கோத்திர சபை பற்றிய கள ஆய்வை மேற்கொள்வதற்காக சென்று அங்குள்ள பெரியவர்களை அணுகியிருக்கிறார்கள். அவர்களோ இவர்களைத் திட்டியிருக்கிறார்கள். இவை பாரம்பரியமாக காக்கப்பட்டுவரும் இரகசியம் என்றும், அந்த விபரங்களை பகிரங்கமாக தம்மால் கதைக்க முடியாது என்று தெரிவித்துள்ளனர்.”



என்று பேராசிரியர் பள்ளியகுரு தெரிவித்திருக்கிறார்.

இந்த கோத்திர சபைகள் இறுதியில் பெரும்பாலும் குளங்களை அண்டிய கிராமங்களில் பேணப்பட்டு வந்திருக்கிறன. மேலும் கிராமங்கள் சாதிவாரியாக இருந்திருக்கின்றன. அவற்றுக்கென்று தனி கோத்திர சபைகள் இயங்கியிருக்கின்றன. அந்தந்த கிராமத்துக்குரிய குலக் கட்டுப்பாடுகள் தனித்துவத்துடன் காணப்பட்டிருக்கின்றன. எனவே இந்த சட்டங்களை பொதுமைப்படுத்தி விளக்குவதில் ஆய்வாளர்களுக்கு சிரமங்கள் உண்டு.

பல்வேறுபட்ட நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் காலத்துக்கு காலம் முன்னெடுக்கப்பட்டவேளை கிராமங்களின் இயல்பு நிலை சீர்குலைந்தன. குடியேற்றங்களால் கிராமங்களில் பல்வேறு சமூகக் குழுவினரும், பல்வேறு சாதியினரும் விவசாய குடியேற்றங்களில் குடியேற்றப்பட்டு கலந்துபோயினர். எனவே “தூய” கிராமம் என்றோ, “தூய” சாதியென்றோ ஒன்று இன்று கிடையாது.” என்கிறார் சந்திரசிறி பள்ளியகுரு.

இலங்கையின் ஆதிவாசிகள் பற்றிய ஆய்வொன்றை கொழும்பு பல்கலைக்கழகத்தில் 2011 மேற்கொண்ட இருவர் (Premakumara De Silva Asitha G Punchihewa) தமது கள ஆய்வுக்காக சில வேடுவர் பிரதேசங்களை தெரிவுசெய்திருந்தனர்.[1] அதில் ஒரு பிரதேசம் ஹேனநிகல (Henanigala) என்கிற பிரதேசம். மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் போது அவர்கள் இந்த இடத்துக்கு குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். 302 குடும்பங்களையுடைய 1078 பேரைக் கொண்ட அந்த சமூகத்தினர் மத்தியில் இருந்த கோத்திரங்களை அவர் அட்டவணைப்படுத்தியிருந்தார் அந்த ஆய்வில். ஆயிரம் பேரைக் கொண்ட ஒரு சமூகத்திலேயே எத்தனை கோத்திரக் குழுக்கள் உள்ளன என்பதைக் காணலாம். இந்த அட்டவணையில் ஏனையோர் என்று இருப்பவர்கள் தமது கோத்திரம் எது என்பதை அடையாளம் காண முடியாது போயுள்ளவர்கள்.

| கோத்திரங்கள் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| ஊறு வறிக - Uru | 512 | *47.5%* |
| தல வறிக - Thala | 143 | *13.2%* |
| மோறன வறிக - Morana | 39 | *3.6%* |
| உணபன வறிக - Unapana | 57 | *5.2%* |
| நபுதான வறிக - Nabudana | 20 | *1.8%* |
| ஏனையோர் | 307 | *28.4%* |
| தொகை | 1078 | *100%* |

இந்த கோத்திர சபைகள் இறுக்கமான - உறுதியான சட்டத்தை நிலைநாட்டும் என்கிற நம்பிக்கை நீண்ட காலமாக மக்கள் மத்தியில் இருந்து வந்திருக்கிறது. அதுதான் பல காலம் அதன் மீதான மதிப்பும், மரியாதையும் எக்காலத்திலும் இருந்திருக்கிறது. செல்வாக்குள்ள ஒருவராலோ, நட்பைக் கொண்ட ஒருவராலோ குறித்த வழக்கொன்றின் தன்மை மாற்றப்படுவதோ அல்லது சீர்கெடுவதோ பெருங்குற்றம். அதனை அவர்கள் “புளத் வெறெத்த” (வெற்றிலைச் சாதி) என்று அழைத்தார்கள். கோத்திர சபை கூடுமிடங்களில் உபசரிப்பு செய்யும் பணிகளை ஒருவருக்கு ஒப்படைக்கும் பட்சத்தில் அதனை அலட்சியப்படுத்தினால் அதனை “பத் வெறெத்த” (சோற்றுச் சாதி) என்று அழைத்திருக்கிறார்கள்.

“சாதி” என்பதைத் தான் அவர்கள் “வெறெத்த” என்றார்கள்.

கோத்திர சபைகள் கூடுவதற்கென்று நிரந்தர கட்டடம் எதுவும் இருந்ததில்லை. குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தமது உறவினர்களுடன் சேர்ந்து கோத்திர சபை கூடுவதற்கு அளவான இடத்தில் ஒரு மடுவத்தை ஏற்படுத்த வேண்டும். அதைச் சுற்றி கயிறு கட்டி எல்லையிட வேண்டும். சபை கூடும் நாள் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தமது உறவினர்களுடன் அங்கு சமூகமளிக்க வேண்டும். கிராமத்து பன்சலையின் பிக்கு, மருத்துவர், விதானையார், பயிர்ச்செய்கை சேனைத் தலைவர், குலத் தலைவர்

என்.சரவணன்

ஆகிய ஐவரும் அங்கு வந்து அமர்ந்ததும் விசாரணை ஆரம்பமாகும். சாட்சிகளை விசாரித்து குற்றத்தை அடையாளம் காண்பார்கள். இதன்போது நீதியைப் பேணுவதற்காக விசாரணை முடியும்வரை குற்றம்சாட்டப்பட்டவரின் வீட்டில் இருந்து எந்தவொரு ஆகாரத்தையும் உண்பது சபையில் கலந்துகொள்பவர்களுக்கு தடை விதிக்கப்பட்டிருக்கும்.

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் கொவிகம சாதியைச் சேர்ந்தவர்களாயின் மேற்படி ஐவரும் அந்த விசாரணையை மேற்கொள்வார்கள். கொவிகம அல்லாதோர் என்றால் அந்த சாதியைச் சேர்ந்தவர்கள் அந்த வழக்கை நடத்தி கிராம சபையிடம் அதை ஒப்படைக்கவேண்டும்.

ஒரு பெண் சுயமாக வேறொரு சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை திருமணம் முடிப்பது “கராபு குலய” என்று சிங்களத்தில் அழைக்கப்பட்டது. அது பெருங்குற்றமாக கருதப்பட்டது.

அரங்கம் செய்திகள்
விளம்பரங்களுக்கு
071 399 909 1
arangamnews@gmail.com

# 'அஞ்சன நிறுக்கும் கண்ணாலம் செய்யும் புத்த தேவர்!'

## பொலனறுவை வேளைக்காரக் கல்வெட்டிலிருந்து



பொலனறுவை சோழர்களின் தலைநகராக எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக விளங்கிய நகரம். ஆனால் அங்கு அதற்கு முன்பும் பின்பும் சோழநாட்டினதும் பாண்டிய நாட்டினதும் முழுமையான ஆதிக்கம் நிலவி இருக்கிறது. அதற்கான சான்றுகளைத் தான் நாம் இன்றும் அங்குள்ள சைவக்கோவில்களாகக் கண்டுகொண்டிருக்கிறோம். அப்படி, பொலனறுவையில் கிடைக்கும் சான்றுகளில் சுவாரசியமான ஒன்று, வேளைக்காரக் கல்வெட்டு.

பொலனறுவை பாலி மொழியில் புலத்திநகரம் என்றும் வடமொழியில் புலஸ்திபுரம் என்றும் அழைக்கப்பட்டது. தமிழில் இதை 'புலைநரி' என்று



அழைத்தார்கள். இராஜராஜசோழன் இலங்கையைக் கைப்பற்றியபோது, இந்நகரின் பெயரை 'ஜனநாதபுரம்' என்று மாற்றினான். பின்பு விஜயபாகு மீண்டும் இந்நகரைக் கைப்பற்றி கி.பி 1055 முதல் 1110 வரை ஆண்ட போது, 'விஜயராஜபுரம்' என்று பெயர் பெற்றிருந்தது.

தமிழர், தெலுங்கர், கேரளர் என்று பல நாடுகளை - பல சமூகங்களைச் சேர்ந்த 'வேளைக்காரர்' எனும் வீரர்கள், புலத்திநகரின் காவல் பணியில் ஈடுபட்டு வந்தார்கள். சோழர் காலத்திலும், பின் விஜயபாகு காலத்திலும், பின்பு பராக்கிரமபாகுவின் படையில் கூட வேளைக்காரர் இடம்பெற்றதை மகாவம்சம் வர்ணிக்கிறது.

ஒருமுறை விஜயபாகுவிற்கும் வேளைக்காரருக்கும் முரண்பாடு ஏற்பட்டதை மகாவம்சம் பதிவு செய்திருக்கிறது. சோழருக்கு வடக்கே கர்நாடகத்தை ஆண்டுகொண்டிருந்த மேலைச் சாளுக்கியருக்கு விஜயபாகு அனுப்பிய தூதர்களை சோழ வீரர்கள் வழிமறித்து அவமானப்படுத்தி அனுப்பியிருக்கிறார்கள். அதனால் கோபமுற்ற விஜயபாகு சோழர் மீது போர் தொடுத்திருக்கிறான். ஆனால், அவன் படையிலுள்ள வேளைக்காரர், சோழருக்கு விசுவாசிகளாக மாறி கலகம் செய்ய, விஜயபாகு தப்பி ஓடி கண்டிக்கு அருகே வக்கிரிகலைக்கு சென்று மறைந்திருந்தான். வேளைக்காரர் வணிகத்தோடு தொடர்புடையவர்கள் என்பதால், நாம் அறியாத வேறு காரணங்களும் இந்தக் கலகத்திற்குக் காரணமாக இருக்கவேண்டும்.

பொலனறுவையில் தலதாமுற்றம் என்று அறியப்படும் முக்கியமான தொல்லியல் பகுதியில், தூபாராமம், வட்டதாகை, நிசங்கலதா மண்டபம் முதலான கட்டிடங்களுக்கு அருகே வேளைக்காரர்கள் அமைத்த ஒரு கல்வெட்டு அமைந்திருக்கிறது. இக்கல்வெட்டின் அருகே உள்ள கட்டிடத்தின் இன்றைய பெயர், அட்டதாகை. ஆனால் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அதன் பெயர், தளதாய்ப்பெரும்பள்ளி. புத்தபிரானின் புனித தந்ததாதுவுக்காக விஜயபாகு எடுத்த கோவில் இது.
சமீபகாலமாக விஜயபாகு காலத்தில் ஏற்பட்ட வேளைக்காரர் கலகத்துக்கும் நாம் பார்க்கப் போகும் வேளைக்காரர் கல்வெட்டுக்கும் தொடர்பு உண்டென்று சொல்லப்பட்டு வருகிறது. இக்கல்வெட்டு விஜயபாகுவின் காலத்திற்குப் பிறகே அமைக்கப்பட்டது என்று கொள்வதற்கான அகச்சான்றுகள் அக்கல்வெட்டில் உள்ளன. அது முழுக்க முழுக்க தலதாப்பள்ளியை வேளைக்காரர் பொறுப்பேற்றுக் கொண்டதற்கான ஒரு ஆதாரம் தானே அன்றி, கலகம் தொடர்பாக எவ்வித தகவல்களும் இதில் பதிவுசெய்யப்படவில்லை என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

பொலனறுவையில் தலதாமுற்றம் என்று அறியப்படும் முக்கியமான தொல்லியல் பகுதியில், சுமார் ஏழடி உயரமான வெண்கற்பலகையாக நிற்கிறது வேளைக்காரச் சாசனம். இதில் சமஸ்கிருத சுலோகம் ஒன்றும், கீழே தமிழ் வரிகளும் காணப்படுகின்றன. சமஸ்கிருத சுலோகம், விஜயபாகு மன்னனின் சேனாதிபதியான நுவர்கல் தேவன் என்பவனால் புலஸ்திபுரத்தில் 'ஜினதந்ததாது பவனம்' (தலதா மாளிகை) அமைக்கப்பட்டது என்பதைச் சொல்கிறது. தமிழ்ப்பகுதியில் அபயகிரி விகாரையின் கீழ், உத்தொருள்மூளையால் நிர்வகிக்கப்படும் 'தளதாய்ப் பெரும்பள்ளி'யையும் அதன் சொத்துக்களையும் முதலமைச்சர் மகாஸ்தாவிரர் முகலனின் வேண்டுகோளுக்கு ஏற்ப வேளைக்காரர்கள் பொறுப்பேற்றுக்கொண்டனர் என்ற விபரம் காணப்படுகிறது.

இங்கு சொல்லப்படும் அபயகிரி விகாரை பற்றித் தெரிந்துகொள்ள நாம் அனுராதபுரம் செல்ல வேண்டும். அனுராதபுரத்தில் மூன்று பௌத்த சங்கங்கள் அமைந்திருந்தன. மகாவிகாரை, அபயகிரிவிகாரை, ஜேதவனவிகாரை என்பனவற்றை மையமாக வைத்து அவை அமைந்திருந்தன. சமய உட்பிளவுகளால் மகாவிகாரையானது மகாசேனனால் இடித்தழிக்கப்பட்டு அங்கு பிற்காலத்தில் ஜேதவனராம விகாரை அமைக்கப்பட்டது. மகாவிகாரையிலிருந்து வெளியேறிய பிக்குகள் தெற்கே உரோகணத்துக்கும் மலைநாட்டுக்கும் இடம்பெயர்ந்ததுடன், அவர்கள் தக்கிணகிரி எனும் சங்கத்தை அமைத்திருந்தனர். பிற்காலத்தில் அபயகிரி, ஜேதவனராமம், தக்கிணகிரி எனும் இந்த மூன்று மரபிலும் ஈழத்துப் பௌத்தம் தழைத்தது. இவர்களில் அபயகிரி விகாரை பெரும்பாலும் மகாயான பௌத்தத்துக்கு சார்பானதாக இருந்தது. புத்தரின் புனித தந்தாதுவையும் ஐயக்கலத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு அபயகிரி விகாரை வசமே இருந்தது.

இக்கல்வெட்டு அபயகிரி விகாரையின் அக்ராயதனமான உத்தொருள்மூளை பற்றிச் சொல்கிறது. உத்தொருள்மூளை என்பது உதுருமுல்ல என்ற சிங்களச்சொல்லின் தமிழ் வடிவம். அது பொலநறுவையில், அனுராதபுர அபயகிரி விகாரையின் பிரதிநிதியாக விளங்கிய மடத்தின் பெயர் என்று ஊகிக்கலாம்.
மகாஸ்தாவிரர் (மகாஸ்தாவிரர என்பது மகாதேரர் என்ற பாலிச்சொல்லின் சமஸ்கிருத வடிவம்;) முகலனின்

**மைங்கணான் மகிழறிவன்**

வேண்டுகோளை, தமது வீரர்களுடன் கலந்தாலோசித்த வேளைக்காரர்கள், வளஞ்செயர் மற்றும் நகரத்தார் எனப்படும் வணிகர் கூட்டங்களின் முன்னிலையில் தளதாய்ப்பெரும்பள்ளியை தம் வசம் வைத்திருக்க முடிவெடுத்திருக்கிறார்கள். அப்பள்ளிக்கு 'மூன்றுகைத் திருவேளைக்காறன் தளதாய்ப் பெரும்பள்ளி' என்று பெயர் சூட்டி, தம் ஒவ்வொரு படையிலிருந்தும் அதன் பாதுகாப்புக்காக ஒவ்வொருவரை நியமித்து 'சந்திர ஆதித்தர் உள்ள வரை நீடிக்கவேண்டும்' என்று கூறி இக்கல்வெட்டில் உறுதி கூறியிருக்கிறார்கள். புத்தபிரானின் புனித சின்னங்களை, அவர்கள் 'மூவுலகுக்கும் சிகாமணியாகிய தளதா பாத்ர தாது சுவாமி தேவர்கள்' என்று மரியாதையுடன் அழைத்திருக்கிறார்கள்.

எல்லாம் சரி. ஏன் தலதாப்பள்ளியின் பாதுகாப்பை வேளைக்காரரிடம் ஒப்படைக்க வேண்டும்? அதற்கு அக்கால வரலாறு நமக்கு தெரிந்திருக்க வேண்டும். விஜயபாகு இறக்கும் போது, அவன் மகன் விக்கிரமபாகு உரோகணத்தில் துணையரசனாக ஆண்டுகொண்டிருந்தான். விஜயபாகுவின் தம்பி ஜயபாகு புலத்திநகரில் முடிசூடியிருந்தான். அதே காலத்தில் விஜயபாகுவின் தமக்கையின் பிள்ளைகள் மூவர் புலத்திநகரின் மணிமுடிக்கு ஆசைப்பட்டு அங்கு படையெடுத்தார்கள். விக்கிரமபாகு உரோகணத்திலிருந்து புறப்பட்டு வந்து, அவர்களைத் தோற்கடித்து புலத்தி நகரில் ஆட்சியில் அமர்ந்தான். புனித தந்ததாது அரசுரிமைச் சின்னம் என்பதால், அதை யாரும் கவர்ந்து சென்று ஆட்சியுரிமை கோரலாம் என்ற இக்கட்டான நிலை இந்த இடைப்பட்ட காலத்தில் நிலவியது. இந்தக் காலத்தில் தான் புலத்திநகரின் ராஜகுருவான மகாஸ்தாவிரர் முகலன் சமயோசிதமாகச் செயற்பட்டு வேளைக்காரர் வசம் தலதாப்பள்ளியின் பாதுகாப்பை ஒப்படைத்திருக்கவேண்டும்.

வேளைக்காரக் கல்வெட்டில் சொல்லப்படும் இன்னொரு செய்தியும் சுவையானது. தளதாய்ப்பெரும்பள்ளியின் புத்தபிரானுக்கு ஆண்டாண்டு தோறும் 'நயனமோட்சமாகிய அஞ்சன நிறுக்கும் கண்ணாலம்' நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. கண்ணாலம் என்பது கல்யாணம் என்பதன் மரூஉ. அது 'மங்கலம்' அல்லது 'திருவிழா' என்று பொருள்படும் சொல். அஞ்சனம் என்றால் மை. நயனமோட்சம் என்பதற்கு 'பார்வையாலேயே வீடுபேற்றைத் தருதல்' என்று பொருள் கொள்ளலாம். எனவே ஒவ்வொரு ஆண்டும், தளதாய்ப் பெரும்பள்ளியில் வீற்றிருந்த புத்ததேவருக்கு கண்களில் மை தீட்டும் திருவிழா இடம்பெற்றிருக்கிறது, அதைப் பார்ப்பது மோட்சத்தை அளிக்கும் என்ற நம்பிக்கையில் பெருமளவு மக்கள் அங்கு கூடியிருக்கிறார்கள் என்பது இதன் மூலம் தெரியவருகிறது. தளதாய்ப் பெரும்பள்ளியை நிர்வகித்த அபயகிரி விகாரை பின்பற்றிய மகாயான பௌத்த மரபு, சைவ – வைணவ மரபுகளுக்கு நெருக்கமானது என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

தளதாய்ப் பெரும்பள்ளி இன்று அட்டதாகை என்ற பெயரில் தூண்களும் செங்கற்சிதைவுகளுமாகக் காட்சியளிக்கிறது. புத்தபிரானின் புனித தந்ததாது இதன் மேல் மரத்தால் அமைந்த முதல் தளத்தில் வைக்கப்பட்டிருந்தது என்கிறார்கள் ஆய்வாளர்கள். அதற்கு ஆதாரமாக சிதைந்த மாடிப்படிகளை இன்றும் இங்கு நாம் காணலாம். பராக்கிரமபாகுவின் காலத்தில் அட்டதாகையின் அருகே புதிதாக அமைக்கப்பட்ட ஹெட்டதாகை, தளதாய்ப் பெரும்பள்ளியாக மாற்றமடைந்ததுடன், இதிலிருந்த புனித சின்னங்கள் அங்கு இடம்மாற்றப்பட்டன. அதற்குப் பிறகு அட்டதாகை சாதாரண வழிபாட்டுத்தலமாக மாற்றம் பெற்றிருக்கவேண்டும்.

ஆனால் அதன் நடுவில் அடியவர்களுக்கு நயனமோட்சம் வழங்கிய புத்ததேவர், திருக்கரங்கள் சிதைந்த நிலையில் இன்றும் வீற்றிருக்கிறார். சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அஞ்சன நிறுக்கும் கண்ணாலம் பண்ணியருளிய மங்கள மகா சிலாமய புத்ததேவர். இத்தனை ஆண்டு கடந்தும் மாறாத அந்தப் புன்னகையில்தான் எத்தனை அர்த்தங்கள்!

# கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தால் புனித மிக்கல் கல்லூரிக்கு கிரிக்கெட் உபகரணம் கையளிப்பு





மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தினாரால் ஐந்து லட்சம் ரூபாய் பெறுமதியான கிரிக்கெட் உபகரணங்களை பாடசாலை அதிபர் திரு.பயஸ் ஆனந்தராஜாவிடம் கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் தலைவர் திரு.சிவநாதன் கையளித்தார்.

மட்டகளப்பு மாவட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிப்பதுடன் தேசிய மட்டத்தித்திற்கு வீரர்களை கொண்டு சேர்க்கும் நோக்குடன் மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கிராமம் 250 மில்லியன் ரூபா செலவில் ஒரு சர்வதச மட்டத்திலான கிரிக்கெட் மைதானத்தை நிர்மாணித்து வருகிறது. இதன் முதற்கட்டமாக, பாடசாலை மட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிப்பதற்காக மட்டக்களப்பில் உள்ள பாடசாலைகளின் கிரிக்கெட் விளையாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரிக்கு ஐந்து லட்சம் ரூபாய் பெறுமதியான கிரிக்கெட் உபகரணங்களை மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தினர் வழங்கி வைத்தனர்.





இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு.பாஸ்கரன், வலய உடற்கல்வி பணிப்பாளர் திரு. லவக்குமார், புனித மிக்கல் கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவர் அருட்பணி ஸ்ரனிஸ்லாஸ் அடிகளார், கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் நம்பிக்கையாளர் சபை பிரதிநிதிகளான திரு.ரஞ்சன், திரு.காசிப்பிள்ளை, கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் தலைவர் திரு.சடாற்சரராஜா, மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் அங்கத்தவர்கள் மற்றும் புனித மிக்கல் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அதிரடியாக கிரிக்கெட் உபகரணங்களை இன்று வழங்கி வைத்ததையும் தாம் பாராட்டுவதாகத் தெரிவித்தார்.

இம்மைதானத்திற்காக புலம்பெயர்ந்து வாழும் எம் நாட்டின் சொந்தங்கள் இப்பாரிய பணிக்கு உதவி செய்ய முன் வந்துள்ளதையும் இதற்கான பிரதிநிதியாக இங்கு வந்து

**ஜெயா**

இப்பணிகளை முன்னெடுக்கும் திரு. புவனசிங்கம் வசீகரன் அவர்களுக்கும் தம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இதன் போது உரையாற்றிய கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் செயலாளர் திரு. அருள்மொழி அவர்கள், இவ்வமைப்பு விளையாட்டு கல்வி வாழ்வாதாரம் என்பனவற்றை மேம்படுத்தும் ஒரு அமைப்பாக செயற்படவுள்ளதாகவும் முதற்கட்டமாக விளையாட்டை




இந்நிகழ்வில் முன்னாள் மட்டக்களப்பு கல்விப்பணிப்பாளர் திரு.பாஸ்கரன் அவர்கள் உரையாற்றுகையில் இப்படிப்பட்ட சர்வதேச தரத்திலான மைதானம் ஒன்றை ஒரு தனி அமைப்பான கோட்டைமுனை விளையாட்டு கிராமம் செயய முன் வந்ததை தன்னால் பாராட்டாமல் இருக்க முடியாது எனவும் அத்தோடு நின்று விடாமல் அதை செயற்படுத்த பாடசாலை மட்டத்தில் மாணவர்களை ஊக்குவிக்க ஊக்குவிப்பதற்கான செயற்பாட்டையும் முன்னெடுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வு புனித மிக்கல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தனரால் ஏற்பாடு செய்து நடாத்தபட்டதுடன் இதற்குரிய சகல விடயங்களையும் திரு.ஆதித்தியன் அவர்கள் மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மட்டு மாநகரசபை

## உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்த 'உள்ளூர் அபிவிருத்தி உதவிச் செயல்திட்டம்'

### LDSP – 'Local Development Support Project'

அன்பழகன் குரூஸ் (JP) M.A, P.G.Dip in Edu, Dip in LG.
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

உள்ளூராட்சி மன்றங்களை வலுப்படுத்துவதற்காக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படும் ஒரு புதிய செயற்றிட்டமே உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டமாகும். இந்தனை LDSP – 'Local Development Support Project' என வழங்கலாம். இச் செயற்றிட்டம் தொடர்பான அறிமுகக் கலந்துரையாடல்



12.02.2019 அன்று மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு விசேட அதிதியாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் எச்.எம்.எம். ஹாரீஸ் அவர்கள் கலந்துகொண்டு உள்ளூராட்சியின் அடுத்தகட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக உரையாற்றினார். இந்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தி.நா. மணிவண்ணன், மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சி.பிரகாஷ் ஆகியோருடன் மட்டக்களப்பு மாநகர சபை கௌரவ முதல்வர் தி.சரவணபவான், பிரதிமுதல்வர், சபை உறுப்பினர்களுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், துணை தவிசாளர்கள், மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தமக்கிடையே கருத்து பரிமாற்றத்தை மேற்கொண்டனர்.

இந்த செயற்றிட்டமானது இலங்கையின் வடக்கு, வட மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள 11 மாவட்டங்களில் இயங்கும் 08 மாநகரசபைகள், 11 நகரசபைகள் மற்றும் 115 பிரதேச சபைகளாக மொத்தம் 134 உள்ளூராட்சி மன்றங்களில் அமுல்படுத்தப்பட இருக்கிறது.

உலக வங்கியின் பெருந்தொகை நிதியுடன், ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசாங்கம் என மொத்தமாக நூறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதியை உள்ளடக்கியதாக ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் பயனடையும் வகையில் 2019ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரையில் இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும். மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் திட்ட இணைப்பு பிரிவு, ஒவ்வொரு மாகாணங்களினதும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் திட்ட நிறைவேற்று பிரிவினூடாக இந்த செயற்றிட்டத்தை முன்னெடுக்க இருக்கின்றது.

இந்த நிதியை பெறுவதற்காக குறித்த ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் தமது நிலையியற் குழுக்களை முறையாக இயக்கி வருவதுடன், தேவையான அலுவலர்கள் காணப்பட வேண்டும். மிக முக்கியமாக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் தத்தமது வட்டார ரீதியான அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து, அவற்றை ஒருங்கிணைத்து, உள்ளூராட்சி மன்றத்திற்கான இடைக்கால அபிவிருத்தித் திட்டத்தை தம்வசம் தயாராக வைத்திருக்க வேண்டும். இவற்றோடு நிதி நடைமுறைகள் தொடர்பாக வருடாந்த கணக்கறிக்கை, கணக்காய்வு அதிபதியின் சாதகமான அபிப்பிராயம் மற்றும் வருடாந்த பொருட் கணக்கெடுப்பு, உள்ளூராட்சி மன்றங்களின் பொதுமக்கள் குறைகள் பொறிமுறை ஆகியவற்றோடு 50வீதத்துக்கு மேல் பெண்களை கொண்ட சமூகக் கணக்காய்வுக் குழுக்கள் இயங்குவதாக செயற்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.



இந்தத் திட்டத்தின் மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் திட்டமிடல் செயல்முறை வலுப்படுத்துவதுடன், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிதியின் மூலம் உள்ளூராட்சி சபைகளை மேம்படுத்தி, அங்குள்ள பொருளாதார கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்து, ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களினதும் நிறுவன ரீதியான அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## நவீன கடைத்தொகுதியுடன் கூடிய விஸ்தரிக்கப்பட்ட கல்லடி பொதுச்சந்தை திறப்பு





விஸ்தரிக்கப்பட்ட நவீன கடைத்தொகுதியுடன் கூடிய மட்டக்களப்பு - கல்லடி பொதுச் சந்தையானது மாநகர முதல்வர் தி.சரவணபவனால் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரை அண்டிய கல்லடிப் பிரதேசமானது வர்த்தக ரீதியாக வளர்ச்சியடைந்துவரும் ஓர் பிரதேசமாக மாறி வருவதனை கவனத்தில் கொண்டு, அங்குள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் கல்லடிப் மாநகரச் சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்ட கடைத்தொகுதியுடன் கூடிய சந்தை தொகுதியானது பொதுமக்களினதும், வர்த்தகர்களினதும் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு மக்களினால் செலுத்தப்பட்டுவரும் வரிப் பணமானது மீண்டும் அவர்களுக்கே சென்றடைய வேண்டும் என்ற



நோக்கோடு மாநகர சபையின் நிதி மூலமாக நிர்மாணிக்கப்பட்ட இச்சந்தைத் தொகுதியினை எமது மக்களிடம் கையளிக்கப்பதில் தான் பெருமிதம் அடைவதாக மாநகர முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் மாநகர ஆணையாளர் காசி சித்திரவேல், பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன், பிரதி ஆணையாளர் நாகராஜா தனஞ்ஜெயன், மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## ஒரு முக்கிய விடயம்





மட்டு மாநகரசபை மட்டக்களப்பை மேம்படுத்த பலதிட்டங்களை வகுப்பதும் அவற்றை செயற்படுத்துவதுமாக உள்ளது. அதில் ஒரு விடயம் கொங்கிறீற் பாதைகள் அமைத்தலாகும். பல இடங்களில் இந்தப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளமை உண்மையாகவே மக்களுக்கு உதவும் வகையில் உள்ளது.

ஆனால் இப்போது இதில் குறிப்பிட ஒரு விடயம் பலராலும் முணுமுணுக்கப்படுகின்றது. பாரஊர்தியின் பயணம் மற்றும் கல், மண், சீமேந்து போன்ற பாரமான பொருள்களை ஏற்றிச் செல்வதனால் இந்தக் கொங்கிறீற் பாதைகளில் வெடிப்புக்கள் உண்டாகி உடைகின்றன.

இந்த பாதைகளை அமைக்கும் அதிகாரிகளுக்கு ஓர் வேண்டுகோள் கொங்கிறீற் பாதைகள் அமைத்து முடிந்ததும் அதில் எவ்வகையான வாகனம் செல்லலாம் என அறிவித்தல் பதாதைகளை இடவும். இது அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு ஒரு விழிப்புணர்வைத் தருவதேடு பார ஊர்திகள் வராமல் தடுக்கவும் உதவும் .

**லியோண்**

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது



மட்டக்களப்பில் வணங்கப்படும் பல கிராமியத் தெய்வங்கள் இந்து மதத்தின் பிரதான போக்குக்குள் வராதவை. அவற்றை இந்துமதவாதிகள் தமது தெய்வங்கள் என ஏற்கவும் மாட்டார்கள். அத்தகைய தெய்வங்களுள் ஒன்று வதனமார் தெய்வம் வதனமார் தெய்வத்தை மாறாதெய்வத்துடன் இணைத்து வதன மாறா எனவும் சில இடங்களில் சொல்வர். வதனமார் என்போர் மாடுகட்டும் ஆட்களாகும். இவர்கள் ஒரு காலத்தில் படை வீரர்களாகவும் இருந்திருக்கலாம் என்றவோர் கருத்தும் உண்டு.

வேட்டை ஆடுதல்,தேன் எடுத்தல் புராதன மக்களின் பிரதான தொழிலானால் நாகரிகத்தின் அடுத்த கட்டம் மந்தை மேய்த்தல் ஆகும். மந்தை மேய்ப்பில் இருந்துதான் வதனமார் எனும் மாடுகட்டும் தெய்வம் உருவானது.


காட்டில் விட்டாத்தியாகத் திரிந்த காட்டு மாடுகளைப் பிடித்துப் பழக்கி, வீட்டு மிருகமாக்கிய காலத்தில்தான் இந்த தெய்வ வணக்கம் உருவாகியிருக்க வேண்டும். மாடு பிடிக்கும் இப்பண்டைய வழக்கத்தை சமயச் சடங்காகச் செய்யும் சடங்குதான் வதனமார் சடங்கு.

## வதனமார் சடங்கு

வதனமார் என்னும் தெய்வம் மாடு பிடிக்கும் தெய்வமாகும். வேடருடன் குமார தெய்வம் சம்பந்தப்பட்டது போல இடையருடன் சம்பந்தப்பட்ட இத்தெய்வம் பின்னால் எல்லோருக்கும் உரிய தெய்வமாகிவிட்டது. வதனமார்களில் கள்ளவதனன், காக்காவதனன், குழுவதனன், குஞ்சுவதனன், பாலவதனன், பால்முட்டி வதனன் எனப் பலவகை வதனன்கள் உண்டு. பாலவதனனும், குழுவதனனுமே பெரும்பாலும் வணக்கத்திற்குரிய தெய்வங்களாகும்.

வதனமார் தெய்வம் வந்தேறிய ஒருவர் வதனமார் பந்தலுக்கு ஆடி வருவார். இதற்குப் பிரத்தியேக ஆட்டம் இல்லை. சன்னதம் மாத்திரமே. ஆனால் வதனமார் அகவல் என்ற பாடல் உண்டு. அதனைப் பலர் பாட அதற்கு ஏற்ப ஆடுவார். மக்கள் பந்தலைச் சூழ பார்வையாளர்களாய் இருப்பர்.

வதனமாருக்கு ஆடுபவர் மக்களிடையே ஆடிச் செல்ல அவருடன் கூட ஒருவர் தண்ணீர்ச் சட்டி தாங்கியபடி பின் செல்வார். வதனமாருக்கு ஆடுபவர் சிறு பிள்ளைகளின் முகத்தில் தண்ணீர் எறிந்தபின் பந்தலுக்குச் சென்றுவிடுவார். தண்ணிர் எறிபட்ட பிள்ளைகள் யாவரும் பந்தலுக்குச் செல்வார்கள். கொடுக்குகளில் ஒருவரை யொருவர் பிடிக்கச் சொல்லி ஒரு பெரிய கயிற்றால் அப்பிள்ளைகளின் முன்னால் நிற்பவரின் இடுப்பைப் பிணைப்பார். அதன்பின் சிவப்பு மேலங்கி அணிந்து, வில்லம்பு அணிந்து மரத்தின் உச்சியைப் பார்த்தபடி முன்னும் பின்னும் சென்று வேட்டை ஆடுவது போல அபிநயித்துவிட்டு, நிற்கும் பிள்ளைகளை மாடாகப் பாவித்து அவர்களை இழுத்துக்கொண்டு கோயிலைச் சுற்றிவதனமாருக்கு ஆடுபவர் ஓடுவார்.



மீண்டும் பழைய இடத்திற்கு வந்ததும் பிள்ளைகளுக்கு வாழைப்பழம், தண்ணீர் கொடுத்து உடம்புக்கு மஞ்சள் பூசி 'ஹாய்" என்று அபிநயித்து மாடுகளைக் கலைப்பது போல அவர்களைக் கலைத்து விடுவார். பாலவதனன், ஆடுபவரில் வந்து முற்பட்டால் சிறு பிள்ளைகளை மாடுகளாகப் பிடிப்பார். குழுவதனன் வந்து முற்பட்டால் பெரிய ஆட்களை மாடுகளாகப் பிடிப்பார். பிள்ளைகளை மாடுகளாகவும், தன்னை மாட்டுக்காரனாகவும் பாவனை செய்து ஆடும் இவ்வாட்டம் நாடகத்

# வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

15

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

தன்மை வாய்ந்ததாகும்.

வதனமார் தெய்வம் வந்து முற்பட்டு விட்டால் சிறியவர்களுக்கு மஹா உற்சாகம் பிறந்து விடும், சிறுவர்கள் பால வதனத் தெய்வம் தங்களைப் பிடித்துச் சடங்கில் உள்ளீர்க்காதா என்ற ஆவலுடன் சிறுவர்கள் காத்திருப்பர் வதனாமார் சடங்கு வெல்லவெளி மாரி அம்மன் கோவிலில் பிரசித்தமானது.

குழ்ந்தைகள் விரும்பும் இன்னொமோர் சடங்கு அனுமார் சடங்காகும்

## அனுமார் ஆட்டம்

அனுமார் தெய்வம் வந்து முற்படும் ஒருவர் தம்மை அனுமார் மாதிரி மாற்றிக் கொள்வார். கைகளை குராண்டிக் கொண்டு முகத்தை அனுமார் மாதிரிக் கோணியும் வைத்துக் கொள்வார்.

தேட்டம்

அனுமார் போல அங்குமிங்கும் பாய்ந்து பாய்ந்து ஆடியபடி பெரிய கோயிலுக்குள் இருந்து அனுமார் பந்தலுக்கு வருவார். பந்தலின் மீது ஏறி இருந்தும் சில வேளைகளில் பந்தலின் பின்னாலுள்ள மரத்தின் மீது விறுவிறு என்று ஏறி இறங்கியும் விளையாடுவார்.

கழுத்தில் வடைமாலை போட்டிருப்பார். தானும் அதைக் கடித்துச் சாப்பிட்டு பிள்ளைகளுக்கும் எறிவார். அனுமார் தெய்வத்தை சூழ இருந்து பார்த்து மக்கள் வணங்குவர். சிறு பிள்ளைகள் மகிழ்வர். அனுமார் போல அபிநயித்தல் இங்கு முக்கியமானதாகும். அனுமார் தெய்வமும், வதனமார் தெய்வ மும் பெரும்பாலும் சிறுபிள்ளைகளைக் கவரும் தெய்வங்களாகும்.

காத்தவராயன் சடங்கு முக்கியமாக வயது வந்த பெண்களைக் கவரும் சடங்காகும்

## காத்தவராயன் ஆட்டம்

காத்தவராயன் தெய்வம் வந்து ஒருவருக்கு முற்பட்டதும் அவர் ஆடி அருகிலிருப்பவரிடம் தனக்கு காத்தவராயன் வந்து முற்பட்டுவிட்டது என்பார். உடன் காத்தவராயன் பாடல்களைப் பூசாரியார் பாடுவார். அப் பாடல்கள் ஒருவித இசையழகு உடையன. காத்தவராயன் இளம் பெண்களைக் கவரும் தெய்வமாகும். காத்தவராயர் பற்றிய கிராமியக் கற்பனை அதுவே. வண்ணார நெல்லியைக் கண்டு மாமி என்று உறவு கொண்டாடி அவள் மகள் காத்தழகிமுத்தின் மோதிரத்தை எடுத்தவன் காத்தான். சாராய பூதியை கண்டு உறவாடிச் சாராயம் உண்டவன் காத்தான். ஆரியமாலை என்ற அரசகுமாரியை மணக்க வளையல் செட்டியாகவும், கிளியாகவும், பஞ்சுச் செட்டியாகவும் உருமாறி விளையாடியவன் காத்தான். இவ்வண்ணம் கண்ணனைப் போல பெண்களுடன் மிக நெருக்கமான கிராமியத் தெய்வமே காத்தான்.

நந்தவனந்தனைக் காத்தவண்டி – அவன்
நான்கு பெண்களைப் பார்த்தவண்டி
அந்தமுடன் சிவபுத்திரன் காத்தானை

ஆசித்து நேசித்தடியுங்கடி
பூசித்து வாசித்தடியுங்கடி.
வண்ணார நெல்லியை கண்டவுடன்
மாமியார் என்று உறவு கொண்டு
வண்ணாரப் பெண்ணான காத்தழகிமுத்து

மோதிரத்தை கொள்ளை கொண்டாண்டி,

சாராய பூதியகம் நாடி – அங்கே
பூராயம் பேசியுற வாடி
சாராயப் பீப்பா முழுதுமுண்டு - இங்கே
ஊரைத் தாண்டிக் காத்தான் வாறாண்டி
உருண்ட கட்டிலின் மேலிருந்தே
உல்லாச நித்திரை போறாராம்
அரண்டு நித்திரை போகாமல்
அவர் எழும்பக் கும்மியடியுங்கடி

என்று பூசாரி பாடும் பாடல், காத்தவராயன் சுவாமி பற்றி மக்கள் கற்பனைக்கு நல்ல உதாரணமாகும்.

காத்தவராயனுக்கு ஆடுபவரும் கும்மிப் பாடலுக்கு ஏற்ப ஆடித் தனக்குரிய பந்தலுக்கு வந்து பார்வையாளரை அழைத்து, சிறப்பாக இளம் பெண்களை அழைத்துக் கட்டுச் சொல்லுவார்.

அவர்கள் பிரச்சினைகள், நோய் இவைகளைக் கூறுவார்.

இளம் பெண்களைப் பார்த்துச் சிரிப்பார்: கண் சிமிட்டுவார்; தலையை அசைப்பார். சில வேளைகளில் இளம் பெண்கள் அணிந்துள்ள அழகான சேலைகளை அடுத்த ஆண்டுக்கு காத்தவராயனுக்கு கொடுக்கும்படி கேட்பார்.

நாடகத்தில் சில பாத்திரங்கள் சில குறிப்பிட்ட வயதினருக்குப் பிடிப்பதுபோல சில கோயில்களில் காத்தவராய சுவாமி வரவு இளம் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் வரவாகும்.

பல மாரிஅம்மன் கோவில்களில் காத்தவராயன் பந்தல் இருக்கும்

(தொடரும்)

# அவருக்கு என்னோட சரியான விருப்பம் மகன்...



விபுலானந்தர் எமது ஆதாரம். ஆனால் அவர் பற்றிய தகவலுக்கு எமக்கு செய்தி ஆதாரமாக, வலுவான ஆதாரமாக இருந்தவர் கோமேதகவல்லி. அதாவது அவரது மருமகளான(அவரது இளைய சகோதரியின் புதல்வி) இவரது கல்வி, வளர்ச்சி போன்ற பல விடயங்களிலும் சுவாமி விபுலானந்தர் மிகுந்த அக்கறையுடன் இருந்திருக்கிறார்.

இவரது பெயர் கோமேதகவல்லி என்றிருந்தபோதிலும், அடிகளாருக்கு கண்ணகையில் இருந்த வாஞ்சை காரணமாக இவரை கண்ணம்மை என்றே அழைத்து வந்திருக்கிறார். விபுலானந்த அடிகளாரின் தாயின் பெயரும் கண்ணம்மையே.
இந்தக் கண்ணம்மை தனது 93வது வயதில் காலமானார்.

உண்மையில் இன்று வரை விபுலானந்தர் குறித்த தகவல்களுக்காக காரைதீவை அணுகுபவர்களுக்கு கண்ணம்மா அக்கா ஒரு தகவல் ஆதாரம். ஆயிரக்கணக்கானவர்களுக்கு தனது தாய்மாமாவான விபுலானந்தர் குறித்த தகவல்களை எந்தவிதமான அலுப்பும் இல்லாமல் அவர் திரும்பத் திரும்பக் கூறிவந்துள்ளார்.

**சீவகன் பூபாலரட்ணம்**

விபுலானந்தரின் சிறு வயது, அவரது துறவறம் எனப் பல விடயங்கள் குறித்தும் பல விதமான தல்கவல்களை கண்ணமையார் கூறிவந்திருக்கிறார்.

நான் கிட்டத்தட்ட பத்து பருடங்களுக்கு முன்னதாக பிபிசி தமிழோசைக்காக (விபுலானந்தர் குறித்த பெட்டகம்) அவரை தொலைபேசியில் அணுகிய போதும், பின்னர் விபுலானந்தர் குறித்த முழுமையான வீடியோ ஆவணத்தை உருவாக்கிய போதும், சலிக்காது தனது மாமன் குறித்த தகவல்களை ஒரு கதை போல அவர் கூறியிருக்கிறார். வீடியோ ஆவணப்படத்துக்காக அவரை நாம் அரங்கத்தின் சார்பில் அணுகிய போது, அவரை முதுமை மிகவும் ஆக்கிரமித்துவிட்டது. ஆனாலும் எந்த விதமான தயக்கமும் இல்லாமல் மிகுந்த வாஞ்சையுடன் அவர் எம்மோடு உரையாடினார். தன்னால், முடிந்தவரை அனைத்துவிதமான தகவல்களையும் தந்தார்.
அவரது தனிப்பட்ட வாழ்க்கை குறித்து எமக்கு பெரிதாக எதுவும் தெரியாது, அப்போதெல்லாம் அவர் அவற்றை பெரிதாக பேசியதும் கிடையாது. நண்பர் சகாதேவராஜாவுடன் அவரது வீட்டுக்கு சென்ற போதெல்லாம் எங்களை மிகுந்த ஆதரவோடு வரவேற்று உரையாடினார். 'விபுலானந்தர் புகழ் பாடவே நான் பிறந்தேன்' என்பது போலவே மிகுந்த ஆர்வத்தோடு அவர் பேசுவதே ஒரு அழகு. அழகான அந்தக் காரைதீவின் அழகு மணக்கும் தமிழ் உரையாடல் அது. இன்னமும் எமது காதில் ஒலித்துக்கொண்டே அது இருக்கின்றது.





ஆனால், கடைசியாக நாம் அவரை சந்தித்து பேட்டி கண்ட போது அவர் திரும்பத்திரும்ப எம்மிடம் கூறிய விடயம், 'அவருக்கு (விபுலானந்தருக்கு) என்னோட சரியான விருப்பம் மகன். ஏனெண்டா நான் அவருடைய தாய் போலவாம்....' என்று திரும்பத் திரும்பக் கூறினார். அந்த வார்த்தைகள் இன்னமும் எனது காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. விபுலானந்தர் புகழ் உலகெங்கும் இருக்கும் வரை இந்தக் கண்ணம்மையின் பெயரும் சேர்ந்தே ஒலிக்கும்.
பாரதிக்கு ஒரு கண்ணம்மா. அவரது கவிதைகளால் வசீகரிக்கப்பட்ட எமது ஈழத்து இளங்கோ "விபுலானந்தருக்கு" இந்தக் கண்ணம்மை.

அன்னாருக்கு அரங்கத்தின் கண்ணீர் அஞ்சலி.

# மட்டக்களப்பு பாரம் தூக்கியும் பீரங்கிகளும்



கடந்த 12.01.2019ஆம் திகதிய அரங்கம் பத்திரிகையில், மட்டுநகர் றேகடியில் அமைந்திருந்த 'பாரம்தூக்கிகள்' (Crane) சம்பந்தமாக எழுதப்பட்டிருந்தது. வாகன வசதிகள் இல்லாத காலத்தில் கப்பல்கள் மூலம் கடல் மார்க்கமாக வரும் பொருள்கள் அனைத்தும் எஞ்சின்தோணி (Boat) மூலமாகவும் அதனுடன் இணைத்து இழுத்துவரப்படும் வத்தை மூலமாகவும் றேகடிக்குக் கொண்டுவரப்பட்டு, அப்போதிருந்த காந்தி சிலையடியில் அமைந்திருந்த உப்புக்குதத்திலும் (உப்பு ஸ்ரோர்) மற்றும் களஞ்சியசாலையிலும் வைக்கப்படும். தூக்கக்கூடிய பொருள்களை, மரத்தினால் அமைக்கப்பட்டிருந்த படிமூலமாக தூக்கிக்கொண்டு வருவர். தூக்கமுடியாத

**ஆர். மகாதேவா**

பொருள்களைப் பாரம்தூக்கிகள் மூலமாக இறக்கி, மாட்டுவண்டி மூலமாகவும் தள்ளுவண்டி மூலமாகவும் எடுத்துச்செல்வர்.

இந்த இரண்டில் ஒன்று, தற்போதும் இருந்த இடத்திலேயே உள்ளது. மற்றையது, அபிவிருத்தி என்ற நோக்கத்தோடு கழற்றி எடுத்தவேளை அதனைக் களவாடவிடாமல் பாதுகாத்து வைத்திருந்தனர். இது, கொங்கிறீற்றுக் குழாய்களை (48", 36", 30") ஏற்றுவதற்குத் தேவைப்பட்டபடியால் செங்கலடியில் அமைந்திருந்த பொறியியல் காரியாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு மட்டக்களப்பிலுள்ள ETI யின் உதவியுடன் அங்கு நிறுவப்பட்டது. இந்தப் பாரம் தூக்கி தற்போதும் செங்கலடியில்தான் இருக்கின்றது.

மேலும், மட்டக்களப்புக் கோட்டையில்



(கச்சேரி) கல்லடிப் பக்கமாகப் பார்த்தபடி அழகாக வைக்கப்பட்டிருந்த பீரங்கிகளில் நான்கு பீரங்கிகள், காலிக் கோட்டையை அழகுபடுத்துவதற்காக அரசியல் அதிகாரிகளின் உதவியுடன் முன்னாள் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. டிக்சன் நிலவீர அவர்களினால் காலிக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இதற்கு இளைஞர்களின் எதிர்ப்பும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரின் எதிர்ப்பும் இருந்தன. இருந்தும் அவை பலனின்றிப் போய்விட்டன. தற்போது அவை காலி கோட்டையில் இருக்க வேண்டும்.



# விளையாட்டு

## சென் அன்ரனிஸ் கழகத்தின் பிரதான தூணாகத் திகழ்ந்த கால்பந்து வீரன் திரு. ஆர்.பி.ஜெகநாதன்



மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் 1980 களில் பிரகாசித்த முன்னணிக் கழகங்களுள் ஒன்றாக சென்ற் அந்தனீஸ் விளையாட்டுக் கழகம் விளங்கியது. மட்டக்களப்பின் புறநகர்ப் பகுதிகளில் வாழ்ந்த கால்பந்தாட்டத்தில் திறன் மிகுந்த வீரர்களுக்கு பெரும்பாலும் களம் அமைத்துக் கொடுத்த ஒரு முன்னணிக் கால்பந்தாட்டக் கழகமாக அந்தனீஸ் விளையாட்டுக் கழகம் திகழ்ந்தது.

புறநகர்ப் பகுதிகளில் செவணசைட் போட்டிகளில் களமாடித் தமது திறன்களை வெளிக்காட்டிய வீரர்களை அழைத்து அவர்களுக்கு நியம முறையிலான கால்பந்தாட்டத்தை ஆட இக்கழகம் அதிகம் வாய்ப்புக் கொடுத்தது. இதனால் மட்டக்களப்பின் புற நகர்ப் பகுதிகளிலிருந்து திறமையான வீரர்கள் தேசிய ரீதியில் பிரகாசிக்கும் வாய்ப்புக்கள் கிடைத்தன.



இக்கழகத்தில் கால்பந்தாட்டம் ஆடி 1980 களில் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கெடுத்த ஒரு முன்னணிக் கால்பந்தாட்ட வீரனாக ஜெயா எனச் சுருக்கமாக அறியப்படும் திரு ஆர்.பி.ஜெகநாதன் அவர்கள் திகழ்ந்தார். 1980 களில் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்ட தெரிவு அணியின் பிரதான பின்கள வீரராக திரு ஜெயா அவர்களே காணப்பட்டார்.

தேசிய ரீதியில் மட்டக்களப்பு கால்பந்தாட்ட அணி பங்குபற்றி இரண்டாம் இடத்தைப்

**து.கௌரீஸ்வரன்**

பெற்று மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்தமையால். இவ்வணியில் பங்குபற்றிய வீரர்களுக்கு அரச நிறுவனங்களில் தொழில் வாய்ப்புக்கள் கிடைத்தன. இந்த வகையில் தனது கால்பந்தாட்டத் திறனுக்குக் கிடைத்த ஒரு பரிசாக இவர், மட்டக்களப்பு மாநகர சபையில் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டார்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி



மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி வித்தியாலய அதிபர் எஸ். ரமேஸ் கலைச்செல்வன் தலைமையில் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் 31.01.2019 அன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மண்முனை வடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.அருட்பிரகாசமும், சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு கல்வி வலய பி.எஸ்.ஐ.இணைப்பாளர் கே.குலேந்திரனும், அழைப்பு அதிதிகளாக மட்டக்களப்பு 38ஆவது படைப்பிரிவு பயிற்சி அதிகாரி லெப்டினல் சி.காண்டீபனும், கிராம சேவையாளர் திருமதி தனுஜா ஜெயக்குமாரும், ஈ.டி.ஓ. திருமதி கோகிலா ராஜபாஸ்கரனும் கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களையும், வெற்றிக் கிண்ணங்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் அணிவகுப்பு அனைவரையும் கவர்ந்தது.



## சின்னவத்தை பாடசாலை விளையாட்டுப் போட்டி



(காரைதீவு நிருபர் சகா)

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட சின்னவத்தை அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி அதிபர் எஸ்.செல்வநாயகம் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக பிரதி கல்விப் பணிப்பாளர் அஸ்லம், கோட்டக்கல்விப் பணிப்பாளர், அருள்ராசா, உதவிக் கல்வி பணிப்பாளர்களான இதயகுமார், நேசகஜேந்திரன், சுரேஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கொட்டும் மழையில் கல்முனை கார்மேல் பற்றிமா இல்ல விளையாட்டுப் போட்டி!



(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் செபமாலை சந்தியாகு தலைமையில் கொட்டும் மழையில் நடைபெற்றன.

மாணவர்களால் அதிதிகளுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, பேண்ட் வாத்தியங்களின் அணிநடை மரியாதையுடன் அழைத்துச்செல்லப்பட்டு, தேசிய கொடியேற்றப்பட்டதோடு தேசியகீதம் மற்றும் பாடசாலை கீதமும் இசைக்கப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மழைகாரணமாக மெய்வல்லுநர் நிகழ்வுகள் தடைப்பட்டிருந்தபோதும் உள்ளக அரங்கில் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வுகள், கராத்தே நிகழ்வும் இடம்பெற்றன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அவர்களும் விஷேட அதிதியாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் அவர்களும் ஏனைய அதிதிகளாக ஜனாப் எம்.எஸ்.அப்துல் ஜலீல் வலயக்கல்வி பணிப்பாளர்



அவர்ளும், கே.பாக்கியராஜ் திட்டமிடல் பணிப்பாளர் அம்பாறை, ரீ.ஜே.அதிசயராஜ் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் அவர்களும் கல்வி பணிப்பாளர்களும் கோட்டக்கல்வி பணிப்பாளர்கள் மற்றும்கல்லூரியின் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்களும் பொதுமக்களும் நலவிரும்பிகள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 23

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

சென்ற வாரம், வினாத்தாள் Iக்குரிய கட்டாய வினாக்களுள் முதலாவது வினாபற்றிப் பார்த்தோம். கட்டாய வினாவாக அமைகின்ற இரண்டாவது வினாவில் ‘அ’ பகுதியிலுள்ள வினா அமைப்பை இவ்வாரம் பார்ப்போம். இது, மாதிரி வினா என்பதைக் கவனத்திற்கொள்க.

### பகுதி I

2. ‘அ’ பகுதியிலுள்ள கவிதையைப் படித்து, அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

‘ஆ’ பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து, அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) காயு ருட்ட லானார் – சூதுக்
களிதொ டங்க லானார்
மாய முள்ள சகுனி – பின்னும்
வார்த்தை சொல்லு கின்றான்
“நீய மித்த தெல்லாம் – பின்னும்
நின்னி டத்து மீளும்
ஓய்வ டைந்தி டாதே – தருமா
ஊக்க மெய்து” கென்றான்.

கோயிற் பூசை செய்வோர் – சிலையைக்
கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன் – வீட்டை
வைத்தி ழத்தல் போலும்
ஆயி ரங்க ளான – நீதி
யவையு ணர்ந்த தருமன்
தேயம் வைத்தி ழந்தான் – சீச்சீ
சிறியர் செய்கை செய்தான்.


‘நாட்டு மாந்த ரெல்லாம் – தம்போல்
நரர்க ளென்று கருதார்
ஆட்டு மந்தை யாமென் – றுலகை
அரச ரெண்ணி விட்டார்
காட்டு முண்மை நூல்கள் – பலதாங்
காட்டி னார்க ளேனும்
நாட்டு ராஜ நீதி – மனிதர்
நன்கு செய்ய வில்லை.

ஓரஞ் செய்தி டாமே – தருமத்
துறுதி கொன்றி டாமே
சோரஞ் செய்தி டாமே – பிறரைத்
துயரில் வீழ்த்தி டாமே
ஊரை யாளு முறைமை – உலகில்
ஓர்பு றத்து மில்லை
சார மற்ற வார்த்தை – மேலே
சரிதை சொல்லு கின்றோம்.

(i) சூதினால் ஏற்படும் இழிநிலையை எடுத்துக்காட்டுக.
(ii) தருமனின் செயல்கள், பாரதியால் நோக்கப்படுமாற்றை விளக்குக.
(iii) சிறந்த ஆட்சியாளன் எவ்வாறு இருக்கவேண்டும் எனப் பாரதி கூறுகின்றார்?
(iv) இக்கவிதை வலியுறுத்தும் விடயங்களாக நீர் கருதுபவை யாவை?

(16 புள்ளிகள்)

விம்பம் – லண்டன் நடாத்தும் ஓவியப் பரிசுப் போட்டியும் கண்காட்சியும்



இலங்கைத் தமிழர்களின் ஓவியக்கலை மரபில் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியவரும்
நவீன ஓவியக்கலையின் முன்னோடியுமான
ஓவியர் அ. மாற்கு ஞாபகார்த்த
ஓவியப் பரிசுப் போட்டியும் கண்காட்சியும்

போட்டி நிபந்தனைகள்:
1. இலங்கையில் வசிக்கும் 6 -15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான போட்டி.
2. 21.0 cm X 29.7 cm அல்லது 29.7 cm X 42.0 cm அளவிலான காகிதம் அல்லது அட்டையில் எந்தவகையான ஊடகங்களையும் பாவித்து வரையலாம்.
3. A. எங்கள் வாழ்வு (Our Life), அல்லது B. எனது கனவு (My Dream) ஆகிய பொருள்பட ஓவியங்கள் வரையப்படவேண்டும்.
4. ஒருவர் ஒன்று அல்லது இரண்டு படைப்புகளையும் அனுப்பிவைக்கலாம்.
5. ஓவியத்தின் பின்புறத்தில் படைப்பாளியின் ஒளிப்படம் ஒட்டப்பட்டு, பாடசாலை அதிபர் அல்லது கிராம சேவகரால் படைப்பாளியின் பெயர், வயது ஆகியன உறுதிப்படுத்தப்பட்டு கையொப்பமிட்டிருக்க வேண்டும்.
6. விண்ணப்பங்கள் 30. 04. 2019 திகதிக்கு முன்பாக கீழ்க்காணும் ஏதாவதொரு முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் அல்லது கையளிக்கப்படவேண்டும்.
7. அனுப்பப்படும் தபால் உறைகளின் மேல் இடது மூலையில் "VIMBAM Art Competition" என்று குறிப்பிட மறக்கவேண்டாம்.
8. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.

வெற்றிபெறும் போட்டியாளருக்கு அவரவர் திறமைகளுக்கேற்ப
Rs. 2,00,000
ரூ.20,000, ரூ.15,000, ரூ.10,000, ரூ.5,000 என
18 பரிசில்கள் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம்: Noolaham Foundation, 185, Aadiyapatham Road, Kokkuvil, Jaffna - Tel:0773 747 828
மட்டக்களப்பு: P. Seevagan, Arangam Office, 227, Bar Road, Batticaloa - Tel: 0713 999 091
கிளிநொச்சி: S. Karunakaran, 754, Kanagarasa Thirunagar North, Kilinochchi - Tel.: 0770 871 681
வத்தளை: Pramila Pradeepan, 142/17, Don Bosco Mawatha, Palliyawatha, Wattala - Tel: 0771 320 760
பதுளை: K. Thirulogashankar, Principal, Bd/Saraswathy National College, Mahiyangana Road, Badulla - Tel: 0716 997 644
மாத்தறை: Chandani Samarawickrama, Sipsara Education Center, 33, Issadeen Town, Matara - Tel: 0715 784 673

பரிசுபெற்ற ஓவியங்கள், செப்ரெம்பர் 2019இல் இலங்கையில் நடைபெறவிருக்கும் ஓவியக் கண்காட்சிகளில் இடம்பெறும்

VIMBAM: an organization for the promotion of art, literature, film and culture


# கற்போம்

## உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்

குணம் சவரிராஜா


02 தொடர்ச்சி...

30. ஒரு அல்டோசு வெல்லமான குளுக்கோஸ் மூலக்கூறின் திண்ம வடிவத்தையும் நீருக்குரிய வடிவத்தையும் வரைக.



32. இருசக்கரைட்டுகள் என்றால் என்ன?
- இவை இரண்டு ஒருசக்கரைட்டுகள் ஒரு கிளைக்கோசிடிக் பிணைப்பால் இணைக்கப்படுவதால் தோன்றும் வெல்லங்கள் ஆகும்.

33. ஒரு இருசக்கரைட்டு எவ்வாறு தோற்றுவிக்கப்படுகின்றது?
- ஒரு ஒடுக்கற் தாக்கத்தினால் பக்கம் பக்கமாகவுள்ள இரண்டு ஒருசக்கரைட்டுகளில் இருந்து ஒரு நீர் மூலக்கூறு அகற்றப்படுவதால் தோன்றும் கிளைக்கோசிடிக் பிணைப்புக்களால் அவை இணைக்கப்படுவதன் மூலம் தோற்றுவிக்கப்படுகின்றது.
- நீர் மூலக்கூறானது ஒரு ஒருசக்கரைட்டின் முர் கூட்டத்திலிருந்தும் இணையும் ஒருசக்கரைட்டிலிருந்து வரும் ர் இல் இருந்தும் தோற்றுவிக்கப்படுகின்றது.




34. இருசக்கரைட்டுக்களுக்கு மூன்று உதாரணங்கள் தந்து, ஒவ்வொன்றையும் ஆக்கும் ஒருசக்கரைட்டுக்களையும் அவை தாக்கமுறும் விதத்தையும் சொற் சமன்பாடாகக் காண்பிக்க.
1. மோல்றோஸ்
2. சுக்குரோஸ்
3. இலக்றோஸ்

குளுக்கோஸ் + குளுக்கோஸ் $\xrightarrow{\text{ஒடுக்கம்}}$ மோல்றோஸ் + $H_2O$

குளுக்கோஸ் + பிறக்டோஸ் $\xrightarrow{\text{ஒடுக்கம்}}$ சுக்குரோஸ் + $H_2O$

குளுக்கோஸ் + கலற்றோஸ் $\xrightarrow{\text{ஒடுக்கம்}}$ இலக்றோஸ் + $H_2O$

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# கிழக்கிலங்கையில் கைவினைக் கலைகள் (பகுதி 1)



வங்கக் கடலினதும், பூமித்தாயினதும் பூரண ஆசியுடன் நெல் வளமும், மீன் வளமும் கொழிக்கும் இயற்கை அன்னையின் அழகுத் தோற்றமாய் அமைந்ததே கிழக்கு மாகாணம். ஆதி குடிகளைச் சொந்தமாகக் கொண்ட அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பாரம்பரியச் சிறப்பு மிக்க மூன்று மாவட்டங்களைக் கொண்டுள்ள இம்மாகாணம், ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுகையில் பாரம்பரிய பண்பாடுகளைப் பேணுவதிலும், கலை, கைவினைகளின் வெளிப்பாட்டுச் சிறப்பிலும் தனித் தன்மை கொண்டதாகும்.

கைவினை என்பது கலை என்னும் சொல்லாடலிலிருந்து வேறுபடுகின்றது. கலை ஒவ்வொரு வெளிப்பாட்டிலும் புதியதாகவும் அதாவது மரபு, கரு, வெளிப்பாடு என்பவற்றில் புதியதாகவும், திறன், மற்றும் படைப்பாற்றல் என்பவற்றை சரிசமமான விகிதத்தில் கொண்டதாகவும் அமைகின்றது. இங்கு போலச் செய்தல் என்பது கிடையாது. ஆனால் கைவினை என்பது கலையிலிருந்தும் வேறுபட்டதாக உள்ளது. திறனை விட படைப்பாற்றல் அதிகமாகவும், பாரம்பரியமானதாகவும், சந்ததிகளுக்கிடையில் கடத்தப்படும் ஒன்றாகவும், சில வேளை சந்ததிகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும், மனித வளத்தையே பிரதான மூலகமாகக் கொண்டதாகவும் அமைவதே கைவினையாகும். இங்கு போலச் செய்தல் பிரதானமான ஒன்றாகும்.

சொல்லின் மூலமே விளக்குவதாயின் கைகளால் செய்யப்படும் வினை அல்லது செயல் எனலாம். நெசவு, பன் உற்பத்திகள், அரக்கு, கைவினைகள், மரச் செதுக்கு, பற்றிக், நூற் பின்னல், சிப்பிக் கைவினைகள், நகை வேலைகள், மட்பாண்டங்கள் போன்றவை கைவினைகளுக்கு உதாரணங்களாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் இருந்தே ஆபரணங்கள், பண்டங்கள் எனும் ரீதியில் கைவினையின் தொடர்ச்சியினைக் காணலாம். வரலாறு அறியப்படக்கூடிய சிந்து சமவெளி தொடக்கம் தற்கால இந்திய துணைக்கண்ட நாடுகள் வரை தமிழர் எமக்கு கைவினைகளில் கொண்ட பரிச்சயத்தை தொல் பொருட்கள், ஆய்வுகள் மற்றும் இலக்கியங்களும் உறுதிப்படுத்துகின்றன. உதாரணமாக நெசவு பற்றி இலக்கியங்கள் பின்வருமாறு கூறுகின்றன:
(புறநானூற்றில் பருத்திப் பெண்டு என்னும் சொல் பாவிக்கப்பட்டுள்ளது) நூலினு மயிரினு நுழைநூற் பட்டினும் பால் வகை தெரியாப் பன்னூறடுக்கத்து நறுமடி செறிந்த வறுவை வீதியும் (சிலப்பதிகாரம்)
புகழ்வரைச் சென்னி மேற் பூசையிறை பெரியன பவளமே யனையன பன்மயிர்ப் பேரெலி (சீவக சிந்தாமணி)

கி.பி. 10ம் நூற்றாண்டு வரை “சாருகவினை” எனும் பெயரில் நெசவு, வேளாளர் தொழில்களில் ஒன்றாக நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளது.

**ஆ.யு. நூருல் அஸ்மாஹ்**
**கல்முனை**

இலங்கையில் விஜயன் வருகையின் போது குவேனி நூல் நூற்றதாக மகாவம்சம் கூறுகின்றது.
இலங்கையைப் பொறுத்த வரை இன ரீதியிலும், வளங்களின் இருப்பின் ரீதியிலும் பிரதேச ரீதியிலும் கைவினைப் பொருட்கள் அடையாளப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் கைவினைகளில் விஷேடப்படுத்திச் சொல்லத்தக்கதாக



நெசவு, பன் கைப்பணிகள், நகை வேலைகள், மரச் செதுக்கு, பற்றிக், சிப்பி கைப்பணிகள் என்பவை அமைகின்றன.

பெரும்பான்மையான தமிழ், முஸ்லிம் மக்கள் நெசவு, மட்பாண்டம், பன் கைப்பணிகள், நகை, மரச் செதுக்கல்கள் போன்றவற்றையும் சிங்களவர் பற்றிக், சிற்பிக் கைப்னிகளையும் செய்கின்றனர்.

இலங்கையில் கைத்தறி நெசவுக்கு பெயர் போன மருதமுனை, மற்றும் நகை வேலைகளுக்குப் பெயர்போன போரதீவு, மட்பாண்டங்களுக்கு பெயர் போன இறக்காமம் ஆகிய பிரதேசங்கள் இம்மாகாணத்திலேயே உள்ளன என்பதோடு ஏனைய கைவினைகளும் கிழக்கு மாகாணத்திற்கு தனி அடையாளத்தைத் தருபவையாக உள்ளன. இக்கட்டுரையில் கிழக்கு மாகாணத்தின் சில குறிப்பிடத்தக்க கைவினைக் கலைகள் சுருக்கமாக விளக்கப்படுகின்றன.

(தொடரும்)

## சிறுகதை

# ஒரு மகளின் பதில் கடிதம்!



அகிலா, ( கவனிக்க - அன்புள்ள என்று போடாமல் தவிர்க்கப்பட்டுள்ளது)


**சிவச்சந்திரன் சிவஞானம்**

நான் உன்னைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்துவிட்டேன், உன்னுடன் என்னால் எதிர்பார்த்த அளவு சந்தோசமாக இருக்கமுடியவில்லை. சின்ன வயதில் எதிர்காலத்தைப்பற்றி யோசிக்காமல் உன்னைக்காதலித்துவிட்டேன். அது ஒரு வயதுக்கோளாறு. இப்போது என் தராதரத்துக்குப் பொருத்தமான மனைவியாக உன்னை வெளியில் காட்டவே வெட்கமாக இருக்கிறது. ஒரு பார்ட்டிக்கு அழைத்துப்போய் உன்னை எப்படி அறிமுகப்படுத்த முடியும்? நீயே சொல்லு ஒஸல் பெயிலானவள் என்றா? படிப்புத்தான் இல்லை, உன் உடம்பையாவது உன்னால் கவனிக்க முடிந்ததா? கலியாணத்தின்போது 55 கிலோ இருந்தாய் இப்போ 85 கிலோவாகிப்போயிருக்கிறாய்.

உன்னைத் தொடுவதற்குக்கூட எனக்கு ஆசை வரமாட்டேன் என்கிறது. நான் இன்னும் இளமையாக இருப்பதாகவே உணர்கிறேன். என் உணர்வுகளைத் தீர்த்துக்கொள்ள ஜெனிபர்தான் சிறந்தவள் என்று நினைக்கிறேன். அவள் அழகும் அறிவும்தான் எனக்குப் பொருத்தம் என்று நம்புகிறேன். அவளும் என்மீது அளவற்ற காதல் வைத்திருக்கிறாள். உனக்கும் என் உணர்வு புரியும் என்று நினைக்கிறேன். சட்டப்படி விவாகரத்து வழக்குப்பதிந்துள்ளேன். உன் வாழ்க்கைக்கான அத்தனை செலவுகளையும் மாதா மாதம் நான் தரத் தயார். தயவு செய்து முகப்புப்புத்தகத்தில் “அகிலா ராகவன்” என்று இருப்பதில் இருந்து “ராகவனை” எடுத்துவிடு. நாம் ஜோடியாக இருக்கும் போட்டோக்களையும் நீக்கிவிடு. இனிமேல் என்னைச் சந்திக்க முயற்சி செய்யாதே. தயவு செய்து இனி எந்தக் கடிதமும் அனுப்ப வேண்டாம். என் முகப்புப்புத்தகத்தின் பாஸ்வேர்ட் ஜெனிபருக்கும் தெரியும் என்பதால் மெசேஞ்சரில் கூட இனி ஒரு மெசேஜும் அனுப்பவேண்டாம். நீ அனுப்பும் கடிதங்களால் ஜெனிபரின் மனது காயப்படுகிறது. தயவுசெய்து இதற்குப் பதில் கடிதம்கூட எழுதிவிடாதே.

இப்படிக்கு
ராகவன்.
அன்புள்ள அப்பாவுக்கு,

நீங்கள் அம்மாவுக்கு எழுதிய கடிதத்தை நானும் வாசித்தேன். இனிமேல் அம்மா உங்களுக்கு நீங்கள் கேட்டபடி எந்தக் கடிதமும் அனுப்பமாட்டார் என்றே நினைக்கிறேன். இந்தக்கடிதத்தை நான் எழுதுவதற்காக என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். எனக்கு உங்களிடம் இருந்து ஒரு உதவி தேவைப்படுகிறது. நீங்கள் அம்மாவை விவாகரத்துச் செய்யப்போவதாக சொல்லி இருந்தீர்கள். நானும் உங்கள் மகள் என்ற ஸ்தானத்தைச் சட்டரீதியாக நீக்கிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு வழக்குச் செலவுக்காக எனக்குக்கொஞ்சம் பணம் அனுப்ப முடியுமா? அதன் பின் நீங்கள் அம்மாவிடம் கேட்டுக்கொண்டதுபோல, நானும் என் பெயரின் முன்னால் இருக்கும் உங்கள் பெயரை எல்லா இடங்களிலிருந்தும் நீக்கி உங்களுக்கு தொந்தரவில்லாமல் இருப்பேன் என்று உறுதிகூறுகிறேன்.
இறுதியாக இரண்டு சின்ன வேண்டுகோளை மட்டும் உங்களிடம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து உங்கள் புதுமனைவியுடன் சேர்ந்து பிள்ளைமட்டும் பெற்றுவிடாதீர்கள். அப்புறம், உங்கள் புது மனைவியும் அம்மா போல குண்டாகிவிட நீங்கள், இன்னொரு புதுமனைவியிடம் உங்கள் ஆசையைத் தீர்க்கப்போய்விட்டால், என்னைப்போல இன்னுமொரு பிள்ளை



கஷ்டப்படவேண்டிவரும் என்பதற்காகவே இதைக்கேட்கிறேன்.

அடுத்து `எப்போ அப்பா வருவார் அக்கா ?` என்று அடிக்கடி அழும் தம்பியிடம் நீங்கள் சாமியிடம் போய்விட்டதால், இனி வரமாட்டீர்கள் என்று ஒரு மாதிரியாய் நம்ப வைத்துச் சமாளித்துக்கொண்டிருக்கிறேன். அதனால் தயவு செய்து அவன் கண்ணில் எப்போதும் பட்டுவிடாதீர்கள். முடிந்தால், உண்மையாகவே சாமியிடம் போய்ச் சேர்ந்துவிடுங்கள். எனக்கு எக்கவுன்ட் திறக்கும் வயது இல்லை என்பதால் நான் கேட்ட பணத்தை அம்மாவின் எக்கவுன்டில் போட்டுவிடுங்கள். இனிமேல் என்னால் எந்தத்தொந்தரவும் இருக்காது.

இப்படிக்கு உங்கள் மூத்தமகள்
ப்ரீத்தி, ஆண்டு 3 C

தொடர்ச்சி...

## ‘படுகொலை செய்யப்பட்ட தமிழ் செய்தியாளர்களுக்கு நஷ்ட ஈட்டை விட, நீதி வழங்குவதே முக்கியமானது’

## _ _ தமிழ் செய்தியாளர்கள் கண்டனம்

அரசாங்கம் உடன்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலக அதிகாரிகள் குழு ஒன்று நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்குச் சென்று யாழ் ஊடக அமையத்தின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகைகளின் ஆசிரியர்கள் ஆகியோரைச் சந்தித்து உரையாடியிருந்தனர்.

2005 ஆம் ஆண்டில் இருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட, அச்சுறுத்தல்களினால் ஊடகத் தொழிலை இழந்தவர்களுக்கான நஷ்டஈட்டுத் திட்டம் ஒன்றை மைத்திரி - ரணில் அரசாங்கம் அறிவித்திருந்தது.

ஆனால் இதுவரைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு தமிழ் ஊடகவியலாளர்களின் உறவினர்களிடம் இருந்தும் கிடைக்கவில்லையென அந்த அதிகாரிகள் சந்திப்பின்போது கூறியிருந்தனர்.

அதற்குப் பதிலளித்த பத்திரிகைகளின் ஆசிரியர்களும் யாழ் ஊடக அமையத்தின் பிரதிநிதிகளும் நஷ்டஈடு முக்கியமானது அல்ல என்று கூறினர். இந்த நஷ்டஈடுவழங்கப்பட்டால் ஏற்கனவே மந்தகதியில் உள்ள விசாரணைகள் முற்றாகவே நிறுத்தப்பட்டுவிடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் ஆகியோர் கொலை செய்ய்ப்பட்டமை, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் போன்றவை இராணுவத்தினராலும் பொலிஸாராலும் மேற்கொள்ளப்பட்டவையே என்றும் அவர்கள் எடுத்துக் கூறினர்.

ஆகவே இராணுவத்தினராலும் பொலிஸாராலும் திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட கொலைகள் என்று தெரிந்தும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமக்குரிய நஷ்டஈட்டுக்கான விண்ணப்பப் படிவங்களை எவ்வாறு பொலிஸ் நிலையங்களில் வந்து பெறமுடியும் எனவும் தமிழ் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். நஷ்டஈட்டைப் பெறுவதற்கான பொலிஸாரின் முறைப்பாட்டு அறிக்கையை உறவினர்கள் விரும்பமாட்டார்கள் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இவற்றில் உள்ள நியாயங்களை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி செயலக உயர் அதிகாரிகள், நஷ்டஈடு வழங்கப்படுவதால் விசாரணைகள் முடக்கப்படாது என்றும் இது இடைக்கால நிவாரணம் மாத்திரமே எனவும் உறுதியளித்தனர்.

அத்துடன். பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நஷ்டஈட்டைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை பொலிஸ் நிலையங்களில் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றும் ஊடக அமைப்புகள் மூலமாக விண்ணப்பங்களை பூர்த்தி செய்து மாவட்ட செயலகங்களில் கையளிக்க முடியும் எனவும் அவர்கள் உறுதியளித்தனர்.

இதனையடுத்து வடமாகாணத்தில் உள்ள பாதிக்கப்பட்ட ஊடகத்துறையினரின் குடும்ப உறுப்பினர்களின் விபரங்களை யாழ் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்படவுள்ள குழு ஒன்று பெற்றுக்கொள்ளவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்கள் பற்றிய விபரங்கள் அங்குள்ள ஊடக அமைப்பிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவா மனித உரிமைச் சபை கூடவுள்ள நிலையில் அவசர அவசரமாக இவ்வாறான நஷ்டஈடுகளை அரசாங்கம் வழங்குவதாக ஊடக அமைப்புகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இந்த நஷ்டஈடும் உரிய முறையில் வழங்கப்படுமா என்பது குறித்தும் ஊடக அமைப்புகள் சந்தேகம் வெளியிட்டுள்ளன. இதேவேளை, ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள் உரிய முறையில் நடத்தப்படவில்லை என்பதைக் கண்டித்து கொழும்பில் உள்ள ஊடக அமைப்புகள் கொழும்பில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் மகஜர் ஒன்றை கடந்த வாரம் கையளித்திருந்தன. இந்த சந்திப்பில் வடமாகாண பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஷான் குணரட்ண, உதயன் பத்திரிகை ஆசிரியர் பிறேமானந், காலைக்கதிர் பத்திரிகையின் ஆசிரியர் என்.வித்தியாதரன், யாழ் ஊடக அமையத்தின் ஸ்தாபகர் ரட்னம் தயாரபரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி...

## மாதவிடாய் : ஆண்கள் அறிந்துகொள்ளவேண்டியவை

ஆணுக்குப் பெற்றுக்கொடுக்கப்போகும் குழந்தைக்காக, அதனால் அந்த மாதாந்த அசௌகரியத்தை எதிர்கொள்ள ஆண்களாகிய நாமும் ஏதோ ஒருவகையில் பங்களிப்புச் செய்ய கடமைப்பட்டவர்களாகிறோம் இல்லையா?

இது ஒரு கணவன் தன் மனைவியை கவனித்துக்கொள்வதாக மட்டும் அமைந்துவிடுவதில்லை, ஒரு சகோதரியை சகோதரன் கவனித்துக்கொள்ளளாம், ஒரு மகன் தன் தாயினைக் கவனித்துக்கொள்ளளாம், ஒரு தகப்பன் தன் மகளினை கவனித்துக்கொள்ளளாம்.

எவ்வாறு கவனித்துக்கொள்ளளாம்?

இதன்போது கவனித்துக்கொள்ளுதல் என்பது ஒரு பெண்ணை நோயாளிபோல கவனித்துக்கொள்வதல்ல.
1.உங்களோடு வாழும் பெண் (தாய், சகோதரி, மனைவி) இவ்வாறான நாட்களில் எரிச்சலடைந்தால் பதிலுக்கு நீங்களும் ஆத்திரப்படாமல் இருக்கலாம்.
2.இந்த நாட்களில் உங்களுக்கு தேநீர் போட்டுத்தர மறந்துவிட்டால், சாப்பாடு தர பிந்திவிட்டது போன்ற அற்ப காரணங்களுக்காக ஆத்திரப்படாமல் இருக்கலாம்.
3.ஒரு பெண் கடையில் நப்கின் வாங்கும்போது கேலி செய்வதுபோல பார்ப்பதைத் தவிர்க்கலாம்.
4.ஒரு பெண்பாவித்த நப்கின்னை குப்பைத்தொட்டியில் எறிவதை கேலி செய்யாமல் இருக்கலாம்.
5.உங்கள் வீட்டில் இருக்கும் பெண்களுக்கு நீங்களே நப்கின் வாங்கிக்கொடுக்கலாம்.

6.எல்லாவற்றுக்கும்மேலாக ஒரு பெண் தனக்கு மாதவிடாய் அதனால் கொஞ்சம் கஷ்டமாக உள்ளது என்று சொல்லக்கூடியளவு உரிமையை அல்லது சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கலாம்.

ஒரு பெண்ணின் மனதில் நீங்கள் உயர்ந்த இடத்தைப்பெற்றுக்கொள்ள இவ்வாறான சின்னச் சின்ன உதவிகளே போதும்.

அடுத்தமாதம் உங்கள் மனைவியோ, காதலியோ மாதவிடாயாய் இருக்கும்போது, " என்ன கஷ்டமாக இருக்கிறதா?" என்று ஆறுதலாய் ஒரே ஒரு கேள்வியை மட்டும் கேட்டுவிட்டு, உங்கள் உறவில் எவ்வளவு சந்தோஷமான மாற்றங்கள் ஏற்படுகின்றது என்று பாருங்கள்.

தொடர்ச்சி...

## பெரியாரைப் புரிந்து கொள்ளல்

கொண்டு வருவதைப் பார்க்கின்றோம். ஒவ்வொரு மதங்களும் தாம் மட்டுமே உண்மையானது என்றும் மற்றவை அழித்தொழிக்கப்பட வேண்டியவை என்றும் போதிக்கின்றன. இந்த அடிப்படைவாத மதநிலைப்பாடுகளை எதிர்ப்பதற்கான ஒரு கருவியாக பெரியாரிசம் காணப்படுகின்றது.

பெரியாரிசத்தை எமது சமூகச் சூழலுக்கேற்ப புரிந்து கொண்டு பின்பற்றும் போது சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஏற்படுவதுடன் ஒவ்வொரு சமூகங்களும் தமது தனித்துவ பிரதேச அடையாளங்களை இழக்காமல் சுயமாக சுயமரியாதையுடன் வாழ்வதற்கும் பெரியாரிசம் உதவக் கூடும் எனலாம்.

2. உலகமயமாக்கம்

முதலாளித்தவமும் பல்தேசியக் கொம்பனிகளும் எல்லாவற்றையும் வர்த்தகப் பொருளாக்கி இலாபம் ஈட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றன. இதுவும் ஒவ்வொரு பிரதேசங்களின் தனித்துவங்களையும் மரபுகளையும் பழக்கவழக்கங்களையும் அழித்து உலகப் பொதுமைக்குள் எல்லோரையும் கொண்டுவரப் பார்க்கின்றன. இதனை எதிர் கொள்வதற்கு பெரியாரிசம் எமக்கு உதவக்கூடும்.

எனவே பெரியாரை ஒரு மதஎதிர்ப்பு வாதியாக மட்டும் பார்க்காமல் சமூக விடுதலைக்கும் சமூகங்களின் தனித்துவமான இருப்புக்குக்கும் பெரியார் எவ்வகையில் உதவுவார் எனச் சிந்தித்து பெரியாரை அணுகும் போது இன்றைய பல நெருக்கடிகளுக்கு அது பயனுடையதாக இருக்கும் எனலாம்.

தொடர்ச்சி...

## ‘ஜனாதிபதி செயலணிக்குழுவின் அனுமதி ...

ஆவணங்களுடன் தோற்றிய 110 குடும்பங்களும் தெரிவாகியுள்ளன.

நேர்முகப்பரீட்சைகளில் தெரிவான வர்களின் பெயர்ப்பட்டியல் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சிலர் தாம் அப்பட்டியலில் விடுபட்டு ள்ளதாகக்கூறி மேன்முறையீடு செய்தனர். பல குடும்பங்கள் பிள்ளை பேரப்பிள்ளை என விரிவடைந்துள்ளன. அவர்களும் விண்ணப்பித்துள்ளனர்.

அரச அதிபரின் அனுமதியுடன் அவர்களுக்கும் நேர்முப் பரீட்சைவைக்கப்பட்டு அந்தப்பட்டியலும் ஜனாதிபதி விசேட செயலணிக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எதுஎப்படியிருந்தபோதிலும் ஜனாதிபதி செயலணிக்குழுவின் அனுமதிகிடைத்ததும் காணிபகிர்ந்தளிக்கப்படவிருக்கின்ற அதேசமயம் உள்ளக வீதிகளுடன் நவீன வீடமைப்புத்திட்டமொன்றை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளோம்.’ என்றார்.

தொடர்ச்சி...

## கால்பந்து வீரன் திரு. ஆர்.பி.ஜெகநாதன்

தேசிய மட்டப் போட்டிகளில் மட்டக்களப்பு மாவட்ட தெரிவு அணியுடன் விளையாட வரும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த முன்னணி வீரர்கள் வினவும் பெயர்களுள் ஒன்றாக ஜெயாவின் பெயரும் இருக்கும். 1992 ஆம் ஆண்டு மட்டக்களப்பு அணியுடன் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்ற வந்த திருகோணமலை மாவட்ட முன்னணி வீரர்கள் மேனன் உள்ளார் ஜெயா எங்கே? எனக் கேட்டார்கள். அந்தளவிற்கு ஒரு சிறந்த பின்கள வீரராக திரு ஜெயா அவர்கள் தனது கால்பந்தாட்டத் திறமையினை வெளிப்படுத்தியவர்.

அந்நாட்களில் ஜெயா, மேனன், குரூஸ் என அழைக்கப்பட்ட அன்ரனீஸ் கழகத்தின் பின்கள வீரர்கள் மூவரும் மட்டக்களப்பின் பிற கழகங்களின் முன்கள வீரர்களுக்கு மிகவும் சவால் கொடுத்து வந்தார்கள். இவர்கள் மூவரும் அன்ரனீஸ் கழகத்தின் பிரதான தூண்களாகக் கருதப்பட்டார்கள். இவர்களுள் மத்திய பகுதியில் விளையாடிய பின்கள வீரராக திரு ஜெயா விளங்கினார்.

1990 களின் பின்னர் திரு.ஜெயா அவர்கள் கால்பந்தாட்டத்திலிருந்து ஒதுங்க ஆரம்பித்தார். எனினும் உள்ளூர் செவணசைட் போட்டிகளில் பயனியர் எனும் கழகத்திற்காக விளையாடினார். 1990 களின் ஆரம்பத்தில் உள்ளூர் செவணசைட் போட்டிகளில் பயனியர் அணியின் ஆதிக்கம் வலுவாக இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விதமாக மட்டுநகரின் முக்கியம் பெற்ற அன்ரனீஸ் கழகத்தின் பிரதான கால்பந்து வீரனாக திரு ஜெயா அவர்கள் பிரகாசித்தமையினை கால்பந்து இரசிகர்கள் மறக்க மாட்டார்கள்.


AGNI Pulayavely
அக்கினி உணவு தயாரிப்புக்கள்
சுவையான மரவள்ளி பொரியல் சுவையான மிக்சர்
புலையவெளி கிராமத்து மிளகாய்த்தூள், கறிவேப்பிலைத்தூள்
என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ள உடன் முன்கூட்டி பதிவை மேற்கொள்ளுங்கள்
இடம் : புலையவெளி கிராமம், பதுளை வீதி,
செங்கலடி, மட்டக்களப்பு
அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் அலயத்திற்கு முன்பாக
தொலைபேசி இலக்கம்
0771516203 0757876853
(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில்
மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)


NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY
Are you 18+ and have GCSEs or work experience?
Do you have A levels but missed your place at university?
Foundation Degree Business (London Metropolitan University)
Foundation Degree Hospitality Management (London Metropolitan University)
HND Business (Pearson)
HND Hospitality Management (Pearson)
BA (Hons.) Final Year- Business (London Metropolitan University)
BA (Hons.) Final Year- Hospitality Management (London Metropolitan University)
Student Finance Available
Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556